# நங்கை



2004

இதழ் - 24

***தமிழீழத்தில் முதன் முதல் பின்வரும் சேவைகளை அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகின்றோம்.***

**நிலா பதிப்பகத்தின் புதிய சேவைகளாக**

**(1) கலர் பிரித்தல் சேவை ( பொசிற்றிவ் எடுத்தல்)**
**(2) மென்காப்பிடுகை சேவை ( 8x5 அளவுகளில்)**
**(3) அழுத்திப் பதிதல் சேவை (எம்போசிங்) (பதிப்புத்தாள்களிலும் ஏனைய பாவனைப்பொருட்களில் பதிப்புச் செய்தல்.**

இவை தவிர வழமையான பதிப்புச் சேவைகளை குறைந்த செலவில், நிறைவான முறையில், அழகுறவும், விரைவாகவும் உங்கள் தேவைகளைப் பெற்றுக் கொள்ள

வட தமிழீழத்தின் பதிப்புத்துறை வல்லுனர்கள்

**நிலா பதிப்பகம்**

பிரதானசாலை, கிளிநொச்சி.

**T.P.No:- 0212285935**




இதழ் 24 பங்குனி - சித்திரை 2004

பாரிய இழப்புக்களும் மனித அவலங்களும் இரத்தஆறும் ஓடிய கடந்த காலங்களின் அரசி மீண்டும் அரியணை ஏறப்போகிறார். சிங்களப் பெரும்பான்மை இனத்தின் தெரிவும் பேரினவாத இராணுவத்தின் தெரிவும் அதுவாகவே இருக்கிறது.

எனினும் தமிழர் தாயகம் எங்கும் இம்முறை மக்கள் தங்கள் ஒருங்கிணைந்த ஆதரவையும் வாக்குகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வழங்கி தமிழர் தம் பலத்தை நிருபித்துள்ளனர். தமிழர்தாயகமான தமிழீழத்தில் நேர்மையுடனும் தர்மத்துடனும் போராடுபவர்க்கே தமது பலரின் குரலும் என உரத்துக் கூறியுள்ளனர்.தமிழரின் தேசியத்தலைமையை முழுமனதாக ஏற்றுக் கொண்டு ஆதரவு தெரிவித்துள்ளனர்

பல சிரமங்களுக்கு மத்தியில் நீண்டதூரம் பயணம் செய்து காத்திருந்து வாக்களித்து, தங்களது துன்பங்களுக்கு விடிவுகாணவென இத் தேர்தற்

களத்தை பயன்படுத்தியிருக்கிறார்கள் மக்கள். விருப்பு வாக்குகள் அடிப்படையில் தமிழர்தாயகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது வாக்குகள் அடிப்படையில் வெற்றிபெறச் செய்திருக்கிறார்கள்.

இதில் இம்முறை தமிழர்தாயகத்திலிருந்து முதன் முதலாக பெண் வேட்பாளரும் தேர்தல்களத்தில் இறங்கி வெற்றியீட்டியுள்ளார். திருமதி பத்மினி சிதம்பரநாதனுக்கு 68, 293 வாக்குகள் யாழ்மாவட்டத்தில் கிடைத்திருக்கிறது. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மகளிர் விவகாரக் குழுவில் கலந்து கொண்ட இப் பெண் வேட்பாளர் பல இக்கட்டான இராணுவ நெருக்கடி நிறைந்த கால்கட்டங்களில் தமிழர் தாயக நிகழ்வுகளிற் பங்குகொண்டவர். தமிழர் தேசமெங்கும் நிகழ்ந்த பொங்குதமிழ் நிகழ்வுகளிலும், மகளிர் சங்கம நிகழ்வுகளிலும் மிகப்பெரிய பங்களிப்பை செய்து தமிழ் மக்களின் தாயக இறைமைக்கு குரல் கொடுத்தவர். இம்முறை எமது தாயகப் பெண்களின் நிலைப்பாட்டை, எழுச்சியை சொல்வதற்கு பெண் பிரதிநிதியாக எம்மிலிருந்து வெளியே வந்திருக்கிறார்

✦✦✦





**நாற்று**
இதழ் 24
பங்குனி – சித்திரை 2004

**உருவாக்கம்**
ஆசிரியர்குழு

**புகைப்படம்**
புகைப்படப்பிரிவு

**அட்டைப்பட வடிவமைப்பு**
பயஸ்

**பக்க வடிவமைப்பு**
கி.சங்கீதன் (அந்திவாணம் பதிப்பகம்)

**அச்சுப்பதிப்பு**
நிலா பதிப்பகம்

**வெளியீடு**
தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்,
2ம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

விலை ரூபா 20/-

☞ உள்ளே துளிர்விடுபவை....

♈ உள்ளக் கதவுகள் திறப்பாய்
♈ துயரம் சுமக்கும் பெண்கள்......
♈ நல்லவராவதும் தீயவராவதும் தாய், தந்தை வளப்பினிலே
♈ பேசும் மௌனங்கள்
♈ காசு தேடிக் கண்ணீர் சுமந்து........
♈ சீட்டுக்காசு
♈ சட்டமுறையற்ற திருமணங்கள்
♈ எல்லாம் நாங்களே
♈ தடைக்கற்களே ஏணிப்படிகளாக.....
♈ பாரதப் பெண்களின் மறுபக்கம்
♈ நீங்கா நினைவில்...
♈ பாக்கியம் மாமியும் பரமேசுவரியும் பவித்திராவும்
♈ சிறுவர்களும் தண்டனைகளும்
♈ ஒரு தென்றலின் வருகை
♈ வாழ்விழந்தவர்கள்?
♈ நூல் அறிமுகம்
♈ பெண்களும் சட்டமும்
♈ கிரண்பேடி தொடர்ச்சி.........

# உள்ளக் கதவுகள் திறப்பாய்!

நாள் தேயும் முன்பே
உடல் தேயும் என் பளுக்களில் - நீ
நூற்றிலொரு பங்கேனும்
சுமக்க வேண்டாம்.
உன் வம்ச விருத்திக்காய்
சிசுச் சுமந்து பிரசவித்துக் கிடக்கும்
எனக்கு பணிவிடை செய்வாயெனவும்
எதிர்பார்க்க மாட்டேன்.
மனங்கோணாத இரவுகளை
உனக்குப் பரிசளிப்பதையே
கடன் என்று நினைக்கும் என்னைச்
சொற்களால் சுட்டபோது கூடப்
பொறுத்துக் கொண்டேன்.
உன் காமத்துள் பொசுக்கினேன்
என் கனவுகளை.
ஊதியம் தரப்படாத
என்னுழைப்பை
எருவாக்கினேன்
உன் வாழ்க்கையின் செழிப்பிற்காய்.
மனப்பெட்டகம் திறந்து
உள்ளிருக்கும் பொக்கிசங்களைக் காட்டும்
பேறெனக்குக் கிடைக்காதிருக்கலாம்.
வாக்குரிமை மறுக்கப்பட்ட
ஜீவிதத்தைக் காப்பதற்காய்
தாலிக்கயிறு தொங்கலாம்
என் கழுத்தில்.
ஆயினும்,
பேசவேண்டியுள்ளேன் உன்னோடு.
உன் ஆறுதல் பார்வை,
அரவணைக்கும் கரங்கள்.
காற்செருப்பைப் போலாயினும்
என்னைத் தேடுகின்ற உன் விழிகள்.
பாதிச்சுமை ஏற்காவிடினும்
வலிக்கிறதா என்ற விசாரிப்பு.
அன்பை மருந்தாக்கும் - உன்
மனச் சுரங்கம்.
இவை போதும் எனக்கு.

உலகில் எதை வென்றும்
சாதித்ததாய் நான் நினைக்கவில்லை
உன் உள்ளக் கதவுகள்
திறக்கும்வரை
உரிமைக்கரங்களைப் பற்றும் வரை.

மனுஷி



# துயரம் சுமக்கும் பெண்கள்..



**செல்வநகர்:-**

வன்னியின் எழில் கொஞ்சும் கிராமங்களில் ஒன்று.. பலராலும் அறியப்படாத இப்போது கொஞ்சம் அறியக்கூடியதாய் உள்ள கிராமம்.. நாற்று வாசகர்களுக்கு ஒரு கிராம தரிசனத்தைக் காட்டுவதற்காக.. நாம் அங்கு சென்றுகொண்டிருந்தோம்...

மாலைச் சூரியன் மறைந்து கொண்டிருந்த பொழுது... பங்குனிமாத வெயிலில் கருகிக்கிடக்கும் பற்றைகளூடான ஒற்றையடிப் பாதைகள்.. பாதைகளின் முடிவுகளில் சிறிய சிறிய குடிசைகளில்.. ஓலைகளும் தகரங்களும்.. தறப்பாள்களுமாக வீட்டின் கூரைகள். போர்க்காலங்களிலே இராணுவ அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பல பெண்கள் இக்கிராமத்தில் இருப்பதாக கிராமத் தலைவர் முத்துச்சாமி குறிப்பிட்டிருந்தார். துணைவன்மாரை இழந்த பல பெண்கள் யாருடைய உதவியுமின்றி கூலிவேலைகளுக்குச் சென்று உழைத்துக் குடும்பங்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்...

அவர்களில் ஒருவராக... பிரதீபன் காமாட்சி வயது 35. பாம்புக் கமத்தில் உறவினர் ஒருவருடன் இணைந்து வீட்டுப் பொருட்களை எடுக்கச் சென்றிருந்த போது இராணுவத்தினரின் கிளைமோர் வெடித்ததில் இவரது துணைவர் கொல்லப்பட்டிருக்கிறார். ஒரு பெண்பிள்ளையும், இரு ஆண் பிள்ளைகளும் இவருக்குண்டு.

காதலித்துத் திருமணஞ் செய்து ஏழ்மையிலும் இனிமையாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருந்த இவர்களுக்கு சத்ஜெய நடவடிக்கையின் போது இராணுவம் கிளிநொச்சியை ஆக்கிரமித்துக் கொள்ள.. வறுமையின் கோரப்பிடி இறுக்கியது.

வளமான வயல் நிலங்களெல்லாம் இராணுவத்தினரின் எறிகணை வீச்செல்லைகளாக. வழமையாகச் செய்யும் கூலித் தொழில் இல்லாமல் போனது.

உறவினருடன் வீட்டுப் பொருள் ஏற்றச் சென்றால் ஏதாவது கூலி கிடைக்கும் என்று நம்பின காமாட்சி "பிரதீபன் வரும் போது கூலிப்பணத்துடன் வருவார். பிள்ளைகளுக்கு சமைத்து வயிறார உணவைக் கொடுக்கலாம்" என்று காத்திருந்தார். வந்தது பிரதீபனின் உயிரற்ற உடல்தான்.

இது நடந்து ஐந்து வருடங்களாகி விட்டன. குடிதண்ணீ வசதியோ அன்றி... மலசல கூட வசதியோ இன்றி இருக்கும் பற்றைகள் சூழ்ந்த பகுதியில் அவருக்கு வாழ்க்கை பழக்கப் பட்டிருந்தது. பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும், பட்டினியில் இருந்து பாதுகாக்க



வேண்டும் என்பதற்காக கூலி வேலைகளுக்குப் போகின்றார்.

"வேலைக்குப் போனால் 150 ருபா. எனக்கு முட்டு வருத்தம் இருக்கு அதால சில நாட்களில் வேலைக்குப் போவதில்லை" என்று கூறினார்.

செல்வநகரின் இன்னொரு குடும்பத்துப் பெண் நவமணி சுப்பிரமணியம். இவருக்கு வயது 35. இவரது துணைவன் குப்பன் சுப்பிரமணியம். 1997ல் பரந்தன் ஓவசியர் சந்தியடியில் காணாமற் போயுள்ளார். 1993ல் தான் இவர்களுக்குத் திருமணம் ஆனது.' பத்து, எட்டு வயதில் இரு பெண் பிள்ளைகள்.

'உங்கள் துணைவருக்கு என்ன நடந்தது? என்று சொல்லுங்கள்' என்று கேட்டோம்.

"வீட்டுப் பொருட்கள் ஏற்றிக் கொடுத்துவிட்டு வாறதா சொல்லிப் போட்டுப் போனார். பின்னேரமாகியும் காணல்லே.. உறவினர்கள் பிறகு போய்ப் பார்த்த வேளை.. அவர் போன வீட்டடியில ஆமியின்ர சப்பாத்து அடையாளம் இருந்ததாச் சொல்லிச்சினம்..."

உங்கட துணைவரை நீங்கள் தேடல்லையா?..

"செஞ்சிலுவைச் சங்கத்தில அறிவிச்சனான்... ஆமி பிடிச்சுக்கொண்டு போய்





களுத்துறையில வைச்சிருக்கிறதாகச் சொன்னார்கள்.. காசு மாறிக் கொண்டு அங்க போனன் ... அங்க இல்லை. அவர் இருக்கிறாரா இல்லையா எண்டு கூடத்தெரியல்லை..' என்றார். அதிகாலையில் எழுந்து பிள்ளைகளுக்கு சமைத்து வைத்து விட்டுக் கூலிவேலைகளுக்குப் போகிறார். திரும்பிவர இரவு ஏழுமணியாகும். வரும்வரை பிள்ளைகள் வாசலில் குந்திக் கொண்டிருப்பார்கள். நாங்கள் சென்ற போது தாயின் வரவுக்காக பிள்ளைகள் காத்திருந்தார்கள். "எங்களுக்கு கிணறில்லை. வேற வீட்டிலதான் தண்ணீ அள்ளுறனான். பின்னேரம் வேலையால வந்தவுடனை தண்ணீ அள்ளிப் போட வேணும். விடியவெள்ளணை தண்ணீ அள்ளப் போகேலாது. போனால் புருஷன் இல்லாதவள் முழுவியளத்துக்கு வந்திட்டா என்று பேசுவினம் என்றார் காமாட்சி. இப்போது தன்னுடைய வளவுக்குள் கிணறு ஒன்று வெட்ட ஆரம்பித்துள்ளார். "வேறு என்ன பிரச்சனைகளை எதிர் கொள்கிறீர்கள்?"

' "நான் என்ர தன்னம்பிக்கையாலையும், முயற்சியாலையும் பாடுபட்டு உழைச்சு மற்றவையிட்ட கையேந்த விடாமல் என்ரை பிள்ளையளை வளர்க்கிறன்... கொஞ்சம், கொஞ்சமா சேமிச்சு அத இதச் செய்யிறன்... ஆனா.. சமுகத்தில் இதை விமர்சிக்கிறாங்கள்.. இல்லாத கதையளைக் கட்டுறாங்கள்.. புருஷன் இல்லாதவா எப்பிடி இப்பிடிச் சம்பாதிக்கிறா? எண்டு கேக்கிறாங்க?...

'புருஷன் இல்லாட்டா ஒரு

" வீட்டுப் பொருட்கள் ஏற்றிக் கொடுத்துவிட்டு வாறதா சொல்லிப் போட்டுப் போனார். பின்னேரமாகியும் காணல்லே.. உறவினர்கள் பிறகு போய்ப் பார்த்த வேளை.. அவர் போன வீட்டடியில ஆமியின்ர சப்பாத்து அடையாளம் இருந்ததாச் சொல்லிச்சினம் "



பொம்பிளை நடத்தை கெட்டவளா இருக்க வேணுமா?... நான் சாதாரண தரம் வரை படிச்சனான். .. எனக்கு புத்தி இருக்கு.. நான் வேலை முடிச்சு கொஞ்சம் தாமதமாக வந்தால் சந்தேகப்படுறாங்க..' என்றார். மனது சுமக்கும் வேதனை அவர் கேள்விகளில் ..வார்த்தைகளில் புரிந்தது.. கூலி வேலையென்றால் ... என்ன வேலை?...

'கொஞ்சக்காலம் உப்பு அள்ளி வந்து கடைகளுக்கு விற்றோம்.. பிறகு அருவி வெட்டினோம்.. இப்ப மிளகாய்த் தோட்டத்தில வேலை.. நிரந்தரமான வேலை எண்டில்லை...'

இன்னும் பல பெண்கள் இக் கிராமத்தில் இருப்பதாக அறிகிறோம். இவர்களில் பலர் தங்களின் குடும்பத் தலைவர்மாரை - கிளிநொச்சி நகர் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்ட பின்னர் எலும்புக்கூடுகளாகவே கண்டவர்கள். இவர்களும் காலை எழுந்து அவசர அவசரமாக சமையலை முடித்து விட்டு கூலி வேலைக்குச் சென்று மீண்டும் ஏழுமணிக்கு வீடு திரும்புவார்கள். வாரத்தின் ஏழு நாட்களுமே வேலை நாட்கள்தான். ஓய்வாக ஓரிடத்தில் உட்காந்திருந்து குழந்தைகளுடன் விளையாடவோ அன்றி அவர்களை மகிழ்ச்சிப்படுத்தவோ முடியாத வாழ்க்கையின் வேகம்.

சமூகத்தின் பல்வேறுபட்ட கருத்துக்களுக்கும், விமர்சனங்களுக்கும், பிரச்சனைகளுக்கும் முகம் கொடுத்து இந்தப் பெண்கள் தமது குடும்பங்களை நிர்வகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

*சி. ஆதிலட்சுமி.*

**துன்பங்கள் நிரந்தரமானவை அல்ல, அவை எப்போதும் பாலத்தின் அடியில் ஓடுகின்ற தண்ணீரைப் போல் ஓடிவிடும்.**

*அன்னை. சாரதாமணி*





# நல்லவராவதும் தீயவராவதும் தாய், தந்தை வளர்ப்பினிலே

என் குழந்தையை கட்டுப்பாட்டுடன் வளர்க்கத் தவறியதால் எங்கள் குடும்பத்தில் நிகழ்ந்த சோகச்சம்பவம் இது.

எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவனின் அழகில் நானும் என் கணவரும் மயங்கிவிட்டோம். சுருள் சுருளான கேசம். வட்டவடிவான முகம். அகன்ற கருமையான கண்கள். சிவந்த ரோஜா இதழ்கள். சிரிக்கும் போது குழிவிழும் கன்னம். ஒரு சிறு துன்பமும் அவனை அணுகாமல் மிகவும் பாதுகாப்புடன் வளர்த்து வந்தோம்.

**" ஒரு தாயின் அனுபவம். இத்தாய் தன் மகனை கட்டுப்பாட்டுடன் வளர்க்கத் தவறியதால் ஏற்பட்ட விபரீதம்"**

அவன் ஆசைப்பட்டதை உடன் கொடுக்காவிட்டால் பலமாக அழ ஆரம்பித்துவிடுவான். அவனுடைய கண்களில் இருந்து நீர் வழிவதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன் கேட்ட அனைத்தையும் வாங்கிக்கொடுத்தோம்.

அவனின் அப்பா வியாபாரம்தான் செய்து வந்தார். அவருக்கோ வியாபாரத்தைக் கவனிக்க நேரம் போதாமல் இருந்தது.

குழந்தை நினைத்ததற்கெல்லாம் அடம் பிடிப்பான். சரியான குழப்படிக் காறனாக இருந்தான். அவன் செய்த தவறுகளை தண்டிக்கத்தவறி

விட்டோம். குழந்தையின் மீது இருந்த அளவு கடந்த பாசத்தால் அவனை தண்டிக்கமுடியாதபடி எங்கள் கைகளில் பாசம் என்னும் விலங்கு பூட்டப்பட்டிருந்தது.

அவனுடைய ஆசிரியர்கள் அவனைப்பற்றிய குற்றச் சாட்டுக்களை கூறும் போதெல்லாம் 'அவன் சின்னவன் அவனுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க உங்களுக்கு தெரியுதில்லைப் போலகிடக்கு' என்று சொல்லிவிடுவோம்.

அவன் பாடசாலையில் படிக்கும்போது ஆசிரியருக்கு அடித்துவிட்டான். அவனைப் பாடசாலையில் இருந்து அனுப்பி விட்டார்கள். அப்போது வீட்டை விட்டு எங்கையாவது ஓடிவிடுவானோ என்ற பயத்தில் அவன் கேட்ட போதெல்லாம் பணத்தைக் கொடுத்து வந்தோம்.

அவன் வளர வளர வீட்டில் தங்கும் நேரத்தை விட வீட்டிற்கு வெளியில் தங்கும் நேரத்தை அதிகரித்துக் கொண்டு வந்தான். சேரக்கூடாத நண்பர்களோடு சேர்ந்து சினிமாவுக்கு போக ஆரம்பித்தான். கெட்ட பழக்கங்களையெல்லாம் பழக ஆரம்பித்தான். ஒரு முறை நகையைத் திருடி விற்றுவிட்டான். சில சமயங்களில் நிறைய பணம் கொண்டு வருவான். இவ்வளவு பணமும் எங்காலை எண்டு கேட்டால் சரியாக பதில் சொல்ல மாட்டான். இப்படி இருக்கும் போது ஒரு நாள் எங்கள் வீட்டு வாசலில் பொலிஸ்காரர்களின் வாகனம் வந்து நின்றது.

வாகனத்திலிருந்து இறங்கியவர்களைக் கண்ட எங்கள் மகன் ஓடுவதற்கு முயற்சித்தான். அந்த வேளையில் அவர்கள் மகனை சுற்றி வளைத்து பிடித்து எங்களுக்கு முன்னிலையில் அடித்து கைகளில் விலங்கைப் பூட்டி வாகனத்தில் ஏற்றிச் சென்று சிறைச்சாலையில் அடைத்து விட்டார்கள்.






நாங்கள் ஒரு குற்றவாளியை வளர்த்து வந்திருக்கிறோம் என்ற உண்மையை அன்றுதான் உணர்ந்து கொண்டோம். மகனின் கையில் விலங்கை மாட்டி இழுத்துச் செல்லும் போது எங்களது வாழ்க்கையே முடிந்துவிட்டதை போன்று எங்களுக்குத் தோன்றியது.

பெற்றோர்களாகிய எங்களுக்கு இவைகள் ஒரு பாடமாக அமையும். குழந்தைகள் ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும் வளர்க்கத்தவறினோம் என்றால் நிறைய அவமானத்துக்கும் உள்ளாகி காலமுழுவதும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் நிலைதான் ஏற்படும்.

எவருமே நல்ல, தீய பழக்கங்களுடன் பிறப்பதில்லை. குற்றவாளிகளாகவும் பிறப்பதில்லை. சாதனையாளர்கள் உருவாகும் இந்த மண்ணில் எங்கள் தவறுகளால் ஒரு சில குற்றவாளிகள் உருவாக்கப்படுகிறார்கள்.

குற்றஞ்செய்யும் பழக்கத்தைக் கற்றுக் கொண்ட குழந்தைகள் பெரியவர்களான பின் நல்லவர்களாக மாறுவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது. பெற்றோர்களாகிய



லோ.அபா




# பேசும் மௌனங்கள்

பரந்த பரப்பில் இருட்டுக் கூரைக்குள் எண்ணில் அடங்காத் தீபங்கள் அடுக்காய் ஒளிதருகின்ற அந்தக் காட்சி ஒன்றும் அத்தனை கசப்பாய் இல்லை சுரேனுக்கு. உயர்ந்த பீடப் பகுதியின் பின்புறம் கூட விளக்கேற்றி வைத்தால் ஈன்றாயிருக்கும் என்று சுரேனின் மனம் எண்ணிப்பார்த்தது.

நட்சத்திரங்கள் அற்ற வானம், நாம் ஏன் ஒரு ஆடியாய் இருந்து இந்த தீப விம்பங்களையெல்லாம் ஏற்று நட்சத்திரப் பற்றாக்குறையை போக்க முடியாமல் போயிற்றே என்ற கவலையில் மேலும் கறுத்தது. குளத்து நீரை மறைக்கும் தாமரை இலைகள் போல, மண் மறைக்கும் மக்கள் கூட்டம் அலை மோதியது. கலைக்க கலைக்க கலையாமல் அணிவகுத்து ஊர்ந்து வரும் எறும்புக் கூட்டங்களிற்குப் போட்டியாக இந்த மக்கள் அணி தொடர்ந்து உள்நுழைந்தது. சுரேனின் பார்வைகள் மனதிற்கு சுகங்கள்தான் கூட்டி வந்தன. வாயிலில் நுழைந்து ஓரளவு தூரம் உள் நடந்த வரைக்கும். எனினும் அந்த இசை... கருவிக்கத்தல் குறைந்து, குரல் பாவம் ஏறிய அந்தப் பாடல் பாறையில் விழுந்த மெல்லிய முதல் மழைத்துளியாய் சுரேனைத்தொட்டுப் பார்த்தது.

மஞ்சளாய்,சிவப்பாய் மாறி மாறி வர்ணம் காட்டியது தீபம். கனகம்மாவின் கண்களிலும் கண்ணீர்த்துளிகளிலும் கூட அந்த வர்ணம் வந்து ஒட்டிக் கொண்டது. கண்களில் சிற்றருவியாய் தொடங்கியது ஆறாய்ப் பாய்ந்தோடி நனைத்து, மடிதொட்டு இறுதியாய் மண்ணடைந்தது. ஏதோ சொர்க்கத்தைக் கண்டது போல சாந்தி கொண்டது. ஸ்... ஸ்... அது என்ன சத்தம்? கண்ணீர் நனைத்த மண்ணுள் ஏதோ ஒரு உயிரின் சிலிர்ப்பு



மெல்லியதாய் நிச்சயமாய் அது உயிரின் சத்தம்தான். தனது இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் மண்ணில் வீழ்கையில் மீண்டும் உயிர்ப்பானாம் மகிஷாசூரன். இந்தக் கண்ணீர்த்துளி வீழ்ந்து மகனை உயிர்ப்பிக்காதா? என்று ஏங்கியது அந்தத் தாய் மனம்.



கனகம்மாவின் தத்திய கண்களில், பரந்த அந்தக் கறுப்பு வெளியில் அடுக்கடுக்காய் மண்ணில் உடலங்கள் கிடக்க, அவற்றின் உயிர்களெல்லாம், அவற்றின் முன்னே எரியும் தீபங்களாய் தெரிந்தது. எரியும் தீச் சுவாலைகளில் அவர்கள் முகம் வளர்வதாய உற்று, உற்றுப் பார்த்துக்கொண்டாள்.

கமரா தொற்றிய கைகள் எத்தனை? வீடியோவுடன் வலம் வருபவை எத்தனை? எனக் கணக்கிட்டுத் தொடர்ந்தன சுரேனின் கால்கள். மேல் நின்று பேசியவர்கள் விளக்கேற்றியவர்களின்; முகங்கள் மறைக்கிறதே! பேப்பரில பார்த்தவர்களா? புதியவர்களா? சாய்.. வடிவாய் தெரியுதல்லை

மனதின் அங்கலாய்ப்பு கால்களிற்கு வேகங் கொடுத்தது. மனசற்குள் ஒரு திருப்தி சுரேனுக்கு ' அப்பா.. எவ்வளவு ரீவிக்காரன்களும், பேப்பர் றிப்போட்டர்களும்.... நாளைக்கு வடிவாய் வரும். உலகமெல்லாம் பார்க்கும்'

உள் நோக்கி கால் தடங்கள் நகர தொலைவுக் குண்டுத் தாக்குதலில் இருந்து மெல்ல நிலத்தில் பரவும் அதிர்வலைகளாய் சுரேன் மனதில் காட்சியாய் பதிவுகள் வானத்தின் அழுகையால் நனைந்து கசகசத்தது சேட்டும், ஜீன்சின் அடிப்புறமும் மட்டும் தான்.. அந்தப் பெண்ணின் கதறலால் அவன் உள்ளத்தில் இடியுடன் கூடிய மழைக்கான எதிர்வு கூறல் கேட்டது.

மகிழ்ச்சியில் பங்கு போட ஆயிரம் பேர்.. ஆனால் துக்கத்திற்கு?.. ஏன் அந்தக் கவலை! அவளின் விசும்பலிற்கு சடப்பொருட்கள் கூட சேர்ந்து அழுதன.

" அண்டைக்கு, நீயும் வந்திட்டா... வீட்டில் யாரு?... அம்மாவுக்கு ஆறுதலாய் நீ அங்கேயே இரு எண்டு திருப்பிக் கலைச்சு விட்டனீங்கள்... உங்களை நினைத்து இப்படி கண்ணீர் சிந்த வேண்டி வரும் எண்டதை மட்டும் சொல்லாமல் போட்டிங்களே... அண்ணா..? " இல்லை விக்கித்து விசும்பி விழுந்த அந்தப் பெண்ணின் வாய் வார்த்தைகளைக் கோர்த்தெடுத்த வாக்கியங்கள்.

புறக்காட்சிகளின் வசீகரிப்பில் சுரேன் மனதில் எழுந்த மகிழ்ச்சித் துள்ளல்கள் அவற்றின் அக விபரிப்புகளால் மெல்ல அடங்கியது. அந்த தீபங்கள் எல்லாம் வெறும் ஒளி தருவதற்காய் ஏற்றி வைக்கப்பட்டவை என்பது மெல்லப் புரிந்தது.

மனது மெல்ல அடைந்து கொண்டிருந்த பக்குவநிலை கால்களிற்கு வந்து சேராத காரணத்தால் அது தன் அலட்சியப் போக்கைத் தொடர்ந்து கடைப்பிடித்தது. விளைவு கல்லறையின் முனை ஒன்றை முட்டிப் பார்த்தது, பின்பு தொடர்ந்தது மனதின் கட்டளைகள் கிடைக்கப்பெறாதத ல். ஆனால் இரண்டடிக்கு மேல் நகர முடியவில்லை, காரணம் ஈனசுரத்தில் முனகிய கனகம்மாளின் குரல்தான்.

" *என்ரை அப்பன்,. நோகுதோடா..?., தடவிவிடட்டா*" கனகம்மாளின் கண்களில் நிஜமாய் உறங்கிக் கொண்டிருந்த அவள் மகனின் கால்களில் தான் சுரேனின் பாதம் தட்டிப்பார்த்தது.



ஒரு கனம் உறைந்து போனான் சுரேன். " ஐயோ என்ன செய்து விட்டேன், உள்ளத்தைத் தட்டித் திறந்து உள் நுழையும் ஞானங்கள் ஒரு சிலதான் அவையும் ஒழுங்குபடுத்தலின்றி கலைந்து போனால்..'' ஆர்ப்பரித்தது மனது. நுழைகையில் இருந்த மகிழ்ச்சிப் பரபரப்பு இல்லாது போனாலும் புதினங்களால் கிடைத்த அமைதியுடன் வெளியேறினான் சுரேன்.

சு.காயத்தரி





# தூரம் தேடி கண்ணீர் சுமந்து..

இன்னும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பைத் தேடிச்செல்லும் பெண்களின் அவலம் தொடர்கிறது. அடிக்கடி பத்திரிகைகளில் வரும் இவர்களின் கண்ணீர்க் கதைகள், போரின் அவலங்களால் அமுங்கிப் போனது கடந்த காலங்களின் துயரம்.

ஆனால் அண்மையில் வத்தளை குணசிங்கபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டு தப்பி வந்த பெண்களின் கதைகளால் மீண்டும் ஒரு முறை இப்பிரச்சனை பரபரப்பாகியுள்ளது. முகவர்களின் மோசடிகள், தில்லு முல்லுகள் வெளிவந்தன.

நீண்ட காலப் போர்வாழ்வு, வறுமை, வேலைவாய்ப்பின்மை, போன்றன நாடற்றவர்களாக, வீடற்றவர்களாக நிர்க்கதியான நிலைக்கு தமிழீழக் குடும்பங்களைத் தள்ளின. பெண்கள் போர்வாழ்வின் பாரங்களைச் சுமந்தனர். உழைப்பாளிகளாயின் இந்தியாவுக்கும் அகதிகளாய் மக்கள் சென்றார்கள்.இந்தியாவைப் பூர்வீகக் குடிகளாகக் கொண்ட மக்கள் பெரிய நம்பிக்கைகளையும், கனவுகளையும் சுமந்தபடி இந்தியக் கரைகளில் இறங்கினர். தமது பூர்வீகமாக இருக்கும் இந்தியா தமக்கு வாழ் வளிக்கும் வசதிகளை ஏற்படுத் தித்தரும் என்ற கனவோடு தஞ்சம் புகுந்தனர்.

இந்திய அரசு இவர்களுக்கான முகாம் களை கட்டிக் கொடுத் தது. மதுரை, குச்சப் பட்டி, வேலூர் போன்ற இடங்களிலுள்ள முகாம் களில் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்த மக்கள் வாழ்வு தேடிச் சென்றனர். இந்திய அரசு கொடுக்கும் சொற்ப நிவாரணம் அவர்கள் வாழ்வுக்கு போது மானதாய் இருக்க வில்லை.

நாளாந்தம் கடல்

தொழிலாளிகளாய் இங்கிருந்து சென்ற மக்கள் இங்கிருந்து தமக்கேற்ற தொழில்களை கஸ்ரப்பட்டுத் தேடினர்.

பெரும்பாலும் அங்கு பெண்கள் செய்யும் சுயதொழில் வாய்ப்பாய் கல்லுடைத்தல் இருந்தது. பெண்கள் வயது வேறுபாடின்றி மலைச்சாரலில் கல்லுடைத்தனர். நாளும் பொழுதும் கைகள் மரத்துப்போக கைகள் வலித்து மீள மீள கல்லுடைத்தனர். உடைத்த கற்களைச் சுமந்து சென்று கிராமம் கிராமமாக விற்றனர். விற்ற சொற்பப்பணம் அங்குள்ள தேவைக்கும், வாழ்க்கைச் செலவுகளுக்கும் ஈடுகட்ட முடியவில்லை. வறுமையென்பது எல்லோர் வீட்டுக் கதவையும் தட்டியது. வாழ்வுக்கான போராட்டம்!

அப்போதுதான் அம் முகாம்களிலுள்ள பெண்களுக்கு மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு இருக்கிறது. என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள் என்ற முகவரின் தொடர்பு கிடைத்தது.

கொழும்பிலுள்ள முகவர் இந்தியாவின் முகாம்களில் உள்ள பெண்களிடம் தொடர்புகளை ஏற்படுத்தினான்.

பெரிய நம்பிக்கைகளையும், ஆசைகளையும் ஊட்டினான். வறுமை, வேலைவாய்ப்பற்ற நிலை இத்தனையும் சேர்த்து அப்பெண்கள் சவுதி அரேபியாவிற்கு செல்லும் கனவுகளோடு உறவுகளைப் பிரிந்தனர். இரண்டு சின்னக் குழந்தைகளையுடைய இருபத்தியாறு வயதுடைய அம்மா, தொடக்கம் பதினாறு வயதுடைய தங்கை உட்பட குடும்பங்களையுடைய பெண்களும், சிறுமிகளும் கொழும்புக்கு முகவரால் கூட்டி வரப்பட்டனர். அங்கு நடந்த கதைதான் என்ன? நாம் இப் பெண்களைச் சந்தித்தோம். கொழும்பில் முகவர்களால் இவ்வாறாக மத்திய கிழக்கில் வேலை ஏமாற்றப்பட்டு வவனியாவுக்கு தப்பி வந்த பெண்களைச் சந்தித்தோம். இதயச் சுமைகளையும் மனம் பேதலித்த வாழ்க்கையையும் அறிந்து கொண்டோம்.



"நான் இந்தியாவின் குச்சப்பட்டி முகாமில் இருந்தேன். எனக்கு மூன்று பெண்சகோதரிகள். எனது உழைப்பு குடும்பத்துக்கு தேவையாய் இருந்தது. அக்காவுக்கு கஸ்டப்பட்டு சீதனம் கொடுத்து கலியாணம் செய்து வைச்சம். எனக்குகீழை இன்னும் இரண்டு சகோதரிகள் இருக்கினம். அவர்களுக்கு திருமணம் செய்து வைக்க எங்களிட்டை காசில்லை."

"நாளும்பொழுதும் கல்லுடைச்சாலும் அதில் வருகின்ற நூற்றைம்பது ரூபா எங்களுக்கு குடும்பச் சீவியத்துக்கே காணாது. அது தான் இப்பிடி சவுதி எங்கையாலும் போனால் உழைக்கலாம் எண்டு இஞ்ச வந்தனாங்கள். பாபு அண்ணை எங்களைக் கூட்டி வந்தார். அவரை நம்பித்தான் வந்தனாங்கள். இஞ்ச வந்த பிறகு தான் தெரிஞ்சுது நாங்கள் மோசமான இடத்துக்கு, மோசமான ஆளைநம்பி வந்திருக்கிறம் எண்டு." என்று கண் கலங்கியபடி கூறினார் அந்த இருபத்தியாறு வயதுடைய இளம் பெண்.

இவ்வாறு ஏமாற்றி வரப்பட்ட பெண்கள் வத்தளையிலுள்ள வீடொன்றின் சிறிய இரு அறைகளில் மட்டும் நாற்பது பேர் அடைக்கப்பட்டு தங்க விடப்பட்டனர். வெளியே இம்முகவருக்குரிய ஆட்களால் கதவு பூட்டப்பட்டபடி இருக்கும். காலை நான்கு மணிக்கு முன்பாக இயற்கைக் கடன் கழிப்பதற்காக, முகம் கழுவுவதற்காக ஒரு முறையும், மீண்டும் இரவு ஒரு முறையும் அறைக்கு வெளியிலுள்ள வீட்டுடன் அமைந்த கழிப்பறைகளுக்கு விடுவார்கள். மீண்டும் உள்ளே விட்டு பூட்டுவார்கள்.

சாப்பாடு அளவுடன்தான் கொடுத்தார்கள். ஒருவரோடு ஒருவர் கதைக்க முடியாது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி அப் பெண்கள் வருடக் கணக்கில் இருந்தார்கள்.

ஒழுங்கான குளிப்பில்லை, பத்துநாளுக்கு ஒரு தடவை, எட்டு நாளுக்கு ஒரு தடவை குழந்தைக்கு குளிப்பாட்டுற பேசினளவு தண்ணியிலை குளிக்க விடுவார்கள்.

ஒழுங்கான சாப்பாடில்லை. நான் இஞ்சை தப்பி வந்த போதுதான் சூரிய வெளிச்சத்தையே கண்டன் என்றார். நான்கு மாதகாலமாக அடைபட்டு அந்த முகவரால் ஏமாற்றப்பட்ட இருபது வயதுடைய பெண். அதைச் சிறை வாழ்க்கையை விட கொடுமையானது என்றுதான் சொல்லலாம். வீட்டில இருந்து கடிதங்கள் வந்தால் தரமாட்டான். வீட்டுக்கும், எங்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இப்பிடித்தான் எங்கடை வாழ்க்கை இருந்தது. வருடக்கணக்கா இந்த அறைக்கை அடைபட்ட வாழ்க்கை என்றார்கள் அவர்கள்.

பதினாறு வயது தொடக்கம் நாற்பத்தாறு வயதுவரையான பெண்கள் அங்கிருந்தார்கள். எல்லோரும் ஐந்து அல்லது ஆறாம் வகுப்பு வரையே கல்விகற்றிருந்தனர். அங்கு தொடர்ந்து அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்கள் பலருக்கு பாலியல் ரீதியான கொடுமைகளும் நிகழ்ந்திருக்கின்றன.

பொதுவாக இவ்வாறு ஏமாற்றி அழைத்து வரும் முகவர்கள் நன்நடத்தையுடையவர்களாக இருப்பது அரிது. இவர்களை ஏமாற்றி வந்த அந்த முகவர் அந்த வீட்டிலேயே வசித்தும்







வருகிறார். மனைவி பிள்ளைகள் இருந்தும் மோசமான நடைத்தையுள்ள இந்த முகவர் அங்கிருந்த பல பெண்களை தனது பாலியல் தேவைகளுக்கு பயன் படுத்தியதோடு வேறு பலரின் தேவைகளுக்கும் விற்றுள்ளார் என்பதும் தெரியவந்தது.

பாபு என்ற பெயரில் அழைக்கப்படும் இம் முகவரின் கொடுமை தாங்காது முன்பும் சிலமாதங்களுக்கு முன் வத்தளை முகாமிலிருந்து பன்னிரண்டு தமிழ்ப் பெண்கள் தப்பி ஓடிவந்து வவுனியாவில் எமது மகளிர் அமைப்பினரிடம் சரணடைந்தனர்.

இவர்கள் இரண்டாம் கட்டமாக தப்பி வந்துள்ளனர். தற்போது வந்த பெண்கள் இன்னும் தங்கள் மனநிலையில் மீண்டெழமுடியாமல் இருக்கிறார்கள். தாங்கள் கடந்து வந்த அந்த கசப்பான வாழ்வின் மனவடுக்களைச் சுமந்தவர்களாக இருக்கிறார்கள். இங்கு தங்கியிருந்த போது சிலர் மனநோய்க்கு உட்பட்டு அங்கோடை மன நோயாளர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டதாகவும் அப் பெண்கள் கூறினர்.

“மாற்றி உடுக்க உடுப்பில்லை, அடிப்படை வசதியில்லை, போதியளவு உணவில்லை, எமது வியர்வை நெடிகளையே நாம் நாளும் பொழுதும் சுவாசித்தோம்.” இவ்வாறு ஒரு வருடத்துக்கு மேலாக தான் இருந்ததாகக் கூறினார் இன்னொரு பெண்.

பெரும்பாலான பெண்கள் வெட்கம், பயம், கௌரவம் என்ற திரைகளால் தங்களுக்கு இவ் ஏமாற்றுக்காறர்களால் நடக்கும் கொடுமைகளை, துன்பங்களை, பாலியல் கொடுமைகளை வெளியே சொல்வதற்கு தயங்குகின்றனர். தாங்கள் மட்டும் துன்பப்படும் நிலையில் முகவர்களின் இவ்வாறான மோசடிகள் கொடுமைகளை அம்பலப்படுத்துவதில்லை.

மத்திய கிழக்கில் வேலை செய்யும் இடங்களில் பெண்கள் அனுபவிக்கும் துயரங்கள் வெளியே அவ்வப் போது வந்தாலும் இங்கிருந்து அனுப்புவதாக கூறி இவர்களை ஏமாற்றும் சம்பவங்கள் வெளியே வருவது குறைவு.

தொழில் வாய்ப்பு

என்று கூறும் முகவர்கள் இரகசியமாக பெண்களை பாலியல் தொழிலுக்கு விற்றுவிடுவது அம்பலமாவதில்லை. மத்திய கிழக்கிலும் இவர்களுக்கான நின்மதியான கௌரவமான தொழில் வாய்ப்புக்கள் தரப்படுவதில்லை. பணிப்பெண்கள் என்று கூறி அழைத்துச் செல்லப்படும் இவர்கள் எல்லா விதமான பணிகளுக்கும் பலாத்காரமாகப் பணியப் படுத்துவது கொடுமை.

கடுமையான வேலைப்பழு, உழைப்புச் சுரண்டல், பாலியல் வதைகள், என்பனவற்றின் மத்தியிலும் இவர்கள் வீட்டுக்கு அனுப்பும் பணத்தின் பெறுமதி உணரப்படுவதில்லை. இத்தகைய பெண்களின் உணர்வுகளை, துயரங்களைப் புரிந்து கொள்வதில்லை.

ஸ்ரீலங்கா அரசு இவர்களுக்கான பாதுகாப்புச் சட்டங்களை இயற்றி இவர்களுக்கான வாழ்வின் உத்தரவாதத்தை அளிப்பதில்லை. ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தவரை இவ்வாறு அனுப்பப்படும். பெண்களால் கூடுதலான அன்னியச் செலாவணி வருமானம் அரசுக்கு கிடைக்கிறது. எனவே பணியகங்களுக்கு இவர்கள் அனுபவிக்கும் வன்முறை விபரங்கள் வந்தாலும் இவற்றை மூடி மறைக்கிறது. அவை வெளியே வருவதற்கு வாய்ப்புக்களில்லை.

எனவேதான் அரசிடம் சொல்லிப் பயனில்லை. அவை சுயலாபம் தேடிக்கொள்கின்றன. இவ்வாறு இவர்களை அனுப்பும் குடும்பத்தலைவர்கள்தான் இவற்றைச் சிந்திக்க வேண்டும்.

நம் நாட்டிலேயே தத்தமது ஆளுமைக்குரிய தொழில் வாய்ப்புகளைத் தேடிச் செல்ல வேண்டும். சுயதொழில் வாய்ப்புக்கள் நிறைய உண்டு. எனவேதான் எமது நாட்டை வளப்படுத்தி நிறைவான வாழ்வை வாழவேண்டும்.

கொற்றவை



# சீட்டுக்காசு

உலகத்தில எந்த வங்கியில காசில்லாமல் போனாலும் போகும். ஆனா பொண்டுகளின்ர கையில காசில்லையெண்டா அதுதான் பெரிய அதிசயமாய் இருக்கும்.

வயித்தைக்கட்டி, அதில ,இதில மிச்சம்பிடிச்சு 'சிறுவாடு' சேர்க்கிறது. அந்தக் காசில சின்னச் சின்ன சீட்டுக் கட்டுறது. இதெல்லாம் எங்கட பொண்டுகளுக்கு கைவந்த கலை. இளைய தலைமுறைப் பெண்களுக்கு பிள்ளை குட்டி பெத்து வளர்த்து அனுபவமுள்ள பெரிசுகள் சொல்லுற முக்கியமான அறிவுரை சீட்டைக் கீட்டைப் பிடிச்சு நாலு காசைச்சேர் எண்டதுதான்.

சீட்டிலும் கிராமங்கள்ள பலவகை. அரிசிச்சீட்டு, சீனிச்சீட்டு, மிளகாய்த்தூள் சீட்டு எண்டுமிருக்கு - அலுமினியப்பாத்திரக் கடையள்ள பாத்திரச் சீட்டு - தளபாடக் கடையில மேசைச் சீட்டு, அலுமாரிச் சீட்டு எண்டெல்லாம் இருக்கிறதுண்டு. காசுச்சீட்டுல குலுக்குச்சீட்டு, கூறல்ச் சீட்டு எண்டு ரெண்டுவகை நடமுறையிருக்கு.

சீட்டுப் பிடிக்கிறது சட்டப்படி அனுமதி பெற்றவர்கள் தான் செய்யலாம். என்றாலும் நட்பு ரீதியாக நம்பிக்கையடிப்படையில் எல்லா இடங்களிலும் சீட்டுக் கட்டுவது நடைமுறையில் இருந்து வருகிறது.

சும்மா வங்கியில காசுசேர்க்கிறதெண்டா அவ்வளவு அக்கறையாக காசு சேர்க்கேலாது. ஆனா சீட்டுக் காசெண்டா தவணைக்கு கட்டியே தீர வேணும்.

அப்ப என்னவிதப்பட்டும் காசுதேடிப் போடுவினம். இப்ப சீட்டுக்கள் எப்பிடிக்கட்டுறது. எண்டு பாப்பம்.

***குலுக்கல்சீட்டு:-***

பத்துப்பேர் சேர்ந்து ஒரு

குலுக்குச் சீட்டு கட்டுவது ( ஆட்கள் தொகை கூடலாம், குறையலாம், காசும் விரும்பிய தொகை கட்டலாம்) எப்படி - மாதக் காசும், 100X10 = ஆயிரம் ரூபா- முதலாவது மாதம் பத்துப் பேருடைய பெயரையும் போட்டு குலுக்கி ஒரு சீட்டை எடுப்பார்கள். - அதில் யாருடைய பெயர் வந்திருக்கிறதோ- அவருக்கே ஆயிரம் ரூபாவும் கிடைக்கும். அடுத்த மாதம் இன்னொருவர் பெயர் வரும். இப்படியே பத்து மாதங்களில் பத்துப் பேரும் மாதம் நூறு ரூபாய் கட்டி ஏதாவது ஒரு மாதத்தில் ஆயிரம் ரூபாய் ரொக்கமாகப் பெறுவார். சில இடங்களில் 10 வரையான இலக்கங்களை ஒவ்வொரு சீட்டிலும் எழுதி முதல் நாளே குலுக்கி பங்காளர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சீட்டை எடுப்பார்கள். இதில் யாருக்கு என்ன இலக்கம் வருகிறதோ அந்த இலக்கத்திற்குரிய மாதச் சீட்டு அவருக்கு. இச் சீட்டை தலைமைதாங்கி நடத்துபவர் 'தாச்சி' எனப்படுவார். வழமையாக எந்தச் சீட்டிலும் முதலாவது சீட்டு தாச்சிக்கேயுரியது. இக்குலுக்கல் சீட்டில் கட்டிய காசு அப்படியே வரும். லாபமில்லை.

***கூறல் சீட்டு:-***

(ஏலச்சீட்டு) இந்தச் சீட்டிலும் முதலாவது கட்டுப்பணம் முழுமையாக 'தாச்சிக்கு (தலைமைக்கு) அதாவது 10 பேர் கட்டிய 100 ரூபாக்களும் தாச்சிக்கு ஆயிரம் ரூபாவாகக் கிடைக்கும். 2வது மாதம் சீட்டு ஏலம் விடப்படும். நூறுரூபாய், நூறுரூபாய் எனத் தாச்சி அறிவிப்பார். சீட்டுத்தேவை யானவர்கள் மேலதிக தொகையை ஏற்றி- உதாரணமாக நூற்றிஐம்பது என்று கேட்பார். பிறகு நூற்றிஐம்பது ரூபாய், நூற்றிஐம்பது ரூபாய் எனக் கேட்க வேறு யாரும் விரும்பினால் தொகையைக் கூட்டிக் கேட்கலாம்.

உதாரணமாக இருநூறு இன்னொருவர் கேட்கலாம். இப்படி உயர்த்தப்படும் தொகை 'கழிவு' எனப்படும். அதாவது மொத்தப் பணமான ஆயிரம் ரூபா யார் கடைசியான உச்சக் கேள்வித் தொகை கேட்டாரோ அவருக்கே சீட்டுப்பணம் கிடைக்கும். அவர் கேட்டது இருநூறு ரூபா என்றால் இந்த இருநூறு ரூபா கழித்து எண்ணூறு ரூபாவே சீட்டு எடுத்தவருக்கு கிடைக்கும். அவர் கழித்த இருநூறு ரூபாவும் பத்துப் பேருக்கும் சமமாகப் பங்கிடப்படும். அப்போ ஒருவருக்கு இருபதுரூபாய் வருகிறதல்லவா? எனவே அம்மாதக் கட்டுத் தொகை எண்பது ரூபா.

இப்படியேசீட்டு எடுப்பவர்கள் தங்கள் தேவையையும், அவசரத்தையும் பொறுத்து கட்டுமான அளவுக்கு கழிவு விடுவார்கள். போகப் போக எடுப்பவர் தொகை முடிவுக்குவர கடசிச் சீட்டுக்கள் லாபமாக வருவதுண்டு. சீட்டுக்காசு உரிய நாள் உரிய நேரத்தில் கட்டத்தவறினால் கழிவுக்காசு கிடைக்காது. முழுப்பணமாக கட்ட வேண்டும். அதாவது 100 ரூபாவும் கட்ட வேண்டும்.



யாராவது கட்டத் தவறியிருந்தாலும் சீட்டு எடுத்தவருக்கு உரிய பணத்தை உரிய நாள், உரிய நேரத்தில் 'தாச்சி' யானவர் கட்டியே தீரவேண்டும். (தன் சொந்தப்பணத்திலோ, கடன் பட்டோ)

முன் சீட்டுக்களைக் கழித்து எடுத்து விட்டு பின் வரும் சீட்டுக்களை ஒழுங்காக கட்டாமல் ஏமாற்றுபவர்கள் உண்டு. அப்படி இருவர்,மூவர் இழுத்தடித்தால் தாச்சியானவர் நொடித்துப் போவார். கட்டியவர்களுக்கு காசு கொடுக்க முடியாமல் போகும். சீட்டுகள் பெருந்தொகையாகப் பிடிப்பதுண்டு. மாதம் இரண்டுதடவை ஆயினும் கட்டுக்காசு பதினைந்து பேர். என்றால் தொகை பதினையாயிரம். மூன்று பேர் கட்டத் தவறினாலும் தாச்சியானவர் தனது கட்டுக் காசுடன் இதுவுமாக மாதம் குறைந்தது எட்டுமுதல் பத்தாயிரம் வரை கட்ட வேண்டியேற்படும். எனவே சீட்டு முறிந்து விடுவதுடன் காசு கட்டியவர்கள் சட்ட நடவடிக்கைக்கும் போக வேண்டிவரும். சீட்டுக்கட்டும் ஒவ்வொருவரும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே இயங்கினாலும் சீட்டு இயற்கையான, செயற்கையான முறைகளிலும் முறிந்து விடுவதுண்டு. பங்காளிகள் இடம் பெயர்ந்து செல்லுதல், மரணமடைதல் ,வகையற்றவராதல், போன்ற இன்னோரன்ன காரணங்களும் இவற்றுள் அடங்கும்.

சீட்டுச் சட்டம் 1999ம் ஆண்டின் முதலாம் எண்சட்டமாகும். இச் சட்டங்களின்படி சீட்டுப்பிடிப்பவர் அதற்கான உரிமத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

தன்னுடன் சீட்டுப் பிடிப்பவர்களுடன் எழுத்து மூல முறியொன்றை நடத்துநர் நிறைவேற்றியிருக்க வேண்டும். சீட்டுத் தொடர்பான அதன் நடத்துனருக்கு மிடையேயான கொடுக்கல் வாங்கல் எல்லாம் தகுந்த ஆவணமாக எழுத்தில் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அப்படிச் செய்யப்படும் ஆவணங்களை தொடர்புடையவர்கள் படியெடுத்து

வைத்திருக்கவும் வேண்டும்.

மேற் குறித்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருப்பின் மட்டுமே 1999ன் பின்னரான சீட்டுப் பிணக்குகளுக்காக நீதி மன்றுகளில் நிவாரணங் கோரி சட்ட நடவடிக்கைகள் எடுக்கலாம். 1999க்கு முற்பட்ட சீட்டுப் பிணக்காயின் நடத்துநர் பங்காளிகள் இருதரப்பினரும் குறித்த எல்லைக்குள் வசிக்கிறார்கள் எனக் கண்டால் சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

சீட்டுக்குச் சேர்ப்பவர் தான் சேர்க்கும் குழுவில் ஒவ்வொருவரையும் நிரந்தர தொழில், நிரந்தர வதிவிடம், நிரந்தர வருமானம் உள்ளதாகவும், நேர்மையுள்ளவராகவும் தெரிவு செய்தல் அவசியம்.

இதெல்லாம் போகட்டும் இல்லத்தரசிகளிடையே நடைமுறையிலுள்ள 50 ரூபாக் காசும், 50 கி.கி. அரிசியும், இரண்டுசுண்டு சீனியும் என்ற சீட்டு ஆபத்துதவியாக அமைவதுண்டு.

பக்கத்து வீட்டுக்காரராக அமையும் பத்துப் பேருக்குள் நடக்கும் இந்தச் சீட்டுக்குள் வீட்டு விசேசங்களில் கை கொடுக்கும். கொஞ்சம் மகளிர் கிராம அபிவிருத்தி சங்கம் சேர்ந்து ஆட்கள் தொகையைக் கூட்டினால் ஒரு சிறு கைத்தொழிலுக்கே முதலாகிவிடும். சேமிப்பு, முதலீடு,தொழில், லாபம் சேமிப்பு.

✦


**தமிழ்க்கவி**

**பெண் அடிமைத்தனத்தின் விலங்கை உடைத்தெறியாத எந்தவொரு நாடும், எந்தவொரு சமூகமும் முழுமையான சமூக விடுதலையைப் பெறமுடியாது.**

தமிழீழத் தேசியத்தலைவர்







# சட்ட முறையற்ற திருமணங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்.

தமிழர்களின் பண்பாட்டுக் கோலங்களில் திருமணம் என்பது முக்கியமான சடங்காகும்.

இச் சடங்கானது நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்து பொன்னுருக்கி ஐயர் வந்து அம்மி மிதித்து அருந்ததி நட்சத்திரம் பார்த்து சமயசார முறைப்படி சிவந்த பட்டுடுத்தி நகைகள், பூக்கள் சூடப்பட்டு அழகுப் பதுமையாக மணவறையில் வீற்றிருக்கும் மணப்பெண்ணுக்கு வெண் பட்டுடுத்தி மாப்பிள்ளைக் கோலம் பூண்ட மணமகன் மங்கலநாண் ( தாலி) பூட்டுவான். இன்றிலிருந்து இவள் என்னுடைய மனைவி. இவர்தான் என்னுடைய கணவனென மணமாலை சூட்டுவாள் மணமகள்.

இப்படியான முறையில் ஒருத்தனுக்கு ஒருத்திதான், ஒருத்திக்கு ஒருத்தன்தான் என்ற பண்புடைய தமிழ்ச் சமூகங்களிலேயே தலைகீழான செயல்களும் நடக்கின்றன. என்னவெனில், எங்களுடைய தமிழ் மக்களின் சமூகங்களில் இருதாரம், மூன்று தாரம் என முறையற்ற திருமணங்கள் பல்கிப் பெருகிக் கொண்டே வருகின்றன.

உதாரணத்திற்கு நாளாந்தம் நீதிமன்றங்களில், காவல்ப் பணிமனைகளில் பச்சிளங் குழந்தைகளுடன் கண்ணீருடன் நிற்கும் பெண்களை அணுகி என்ன பிரச்சனை உங்களுக்கு என்று கேட்டால் என்னுடைய கணவன் பக்கத்து வீட்டுப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு ஓடிவிட்டார். அவருடன் வேலை செய்யும் பெண்ணைக் கூட்டிக் கொண்டு போய்விட்டார். இப்படிக் கூறுவார்கள்.

இதில் உண்மை என்னவென்றால் ஆணும், பெண்ணும் அறிந்துதான் இன்னுமொரு பெண்ணுக்கு துரோகம் செய்கின்றார்கள். இதில் பாதிக்கப்படுவது கணவனால் கைவிடப்பட்ட பெண்ணும், குழந்தைகளும் என்பதே குறிப்பிடத்தக்கது.

இப்படியான பிரச்சனைகள் ஏன் ஏற்படுகிறது என அலசி ஆராயும் போது பல விட்யங்களை சம்பந்தப்பட்ட ஆணும், பெண்ணும் தெரிவிக்கின்றனர். இதற்கு காரணம் எமது சமூகந்தான். ஒரு பெண் திருமணமானால் அவள் கணவனுக்கு கீழ் பணிந்து நடக்க வேண்டும். இந்தக் கோட்பாடு இன்றும் எம் சமூகங்களிடையே நிலவி வருகின்றது. இதன் அடிப்படையிலேயே குடும்பங்களிடையே பிணக்குகள் ஏற்பட்டு இரு தாரமணங்கள் பல உருவெடுக்கின்றது.

அதுமட்டுமல்ல பொருளாதார பிரச்சனை காரணமாக கணவன், மனைவி இருவருமே உழைக்க வேண்டிய தேவை. இதனால் வேலைத்தளங்களில் நட்பாகத் தொடங்கும் உறவு காதலில் மலர்ந்து இரகசியமான உறவில் முடிகின்றது. இவ்விடயத்தில் பெருமளவில் ஆண்கள் சம்பந்தப்படுகிறார்கள். ஒரு சில பெண்களும் சம்பந்தப்படுகிறார்கள்.

இரு தாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் பிடியிலும் சிக்குவார்கள், சட்டத்தின் பிடியில் சிக்காமல் பலர் உள்ளார்கள்.

இருதார மணங்கள் உருவாக பல காரணங்கள். சில திருமணமான கணவன், மனைவியிடையே ஆழமான அன்புறவும், புரிந்துணர்வும் நிலவுவதில்லை. கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் அவர்களது தேவைகளை அன்பின் அடிப்படையில் நிறைவேற்ற நினைப்பதில்லை.

உதாரணமாக' கணவன் எனக்கு நாளைக்கு முக்கிய நிகழ்வு ஒன்று அலுவலகத்தில் உள்ளது. ஒரு சோடி உடுப்பை சலவை செய்து வையுங்கள்'





இதற்கு மனைவியின் பதில் உமக்கு உடுப்பு சலவை செய்யவோ நான் வந்தனான். உம்முடைய உடுப்பை நீரே சலவை செய்யும்.' இதே நேரம் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் மனைவி கணவனிடம் கோருகிறார். 'எனக்கு சுகயீனமாகவுள்ளது. கிணற்றில் நீர் இறைத்து விடுங்கள்.' இதற்கு கணவன் 'எனக்கு நேரமில்லை. நீரே ஒருமாதிரி இறைத்துக் கொள்ளும்' என்று கூறுகின்றார்.

இந்தச் சந்தர்ப்பங்களில் தான் குடும்பங்களில் விரிசல்களும், குழப்பங்களும், உடைவுகளும் உருவாகின்றன. இந்தச் சிக்கலான அமைதியற்ற சூழ்நிலையில் வேலைத்தளத்தில் இன்னுமொரு பெண்ணின் அன்பும், ஆதரவும் கிடைக்கும் போதே இருதாரமணத்தில் முடிகிறது நிலமை.


இதைவிட மற்றைய காரணம் திருமணமான கொஞ்சக்காலத்தில் தனது மனைவியைவிட அழகான பெண் ஒருத்தியை அயல் வீட்டிலோ, அல்லது வேலைத் தளங்களிலோ காணும்போது ஒரு சிந்தனை உருவாகிறது. 'என்னுடைய மனைவி பட்டிக்காடு அல்லது பழமையில் மிதப்பவள். இவள் நவநாகரீகமான பெண். அல்லது கவர்ச்சிகரமானவள் என எண்ணி அந்தப் பெண்ணில் மனம் தாவி படிப்படியாக நட்பு காதல் என மலர்ந்து இருதாரத்தில் முடிவடைகிறது.

இந்த இருதார மணம் சமூகங்களிடையே அரங்கேறாமல் தடுப்பதற்கு சமூகம் ஒத்துழைக்க வேண்டும்.

எப்படி என்றால் சமூகத்தில் திருமணம் செய்யும் தம்பதிகள் மத்தியில் ஆழமான அன்புறவும், புரிந்துணர்வும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தலும், நிலவ வேண்டும்.

அதே நேரம் ஏனையவர்கள் அவர்களது குடும்பத்தை பிளவுபடுத்த எண்ணக் கூடாது. இதில் முக்கியமாக கணவன்-மனைவி சார்ந்த உறவுகள் விழிப்பாக இருக்க வேண்டும். உதாரணமாக மனைவியின் அக்கா தங்கை கணவனின்

அண்ணன், தம்பி குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முயலக்கூடாது. இவ்விடயம் சில குடும்பங்களில் நடப்பது யதார்த்தமானது. சில இடங்களில் இவர்கள் உண்மையில் நட்பாக பழகினாலும் கணவன்-மனைவி மீதும், மனைவி-கணவன் மீதும் சந்தேகம் ஏற்பட்டு குடும்பத்தில் குழப்பம் ஏற்படும்.



மேற்குறிப்பிட்ட குற்றச் செயல்கள் சமூகங்களிடையே ஏற்படாமல் தடுப்பதற்கும் நீதிநிர்வாகத்துறை சட்டங்களை உருவாக்கியுள்ளது. 'வல்லவன் வகுத்ததே சட்டம் என்ற நிலைக்கு நாம் செல்லாது எமது மக்களின் நலன்களுக்கும் பாதுகாப்புக்கும் உகந்ததாக எமது நீதி அமைய வேண்டும்.' என எமது தேசியத்தலைவர் கூறிய கருத்துக்கமைய உருவாக்கப்பட்ட சட்டங்கள் ஊடாக நீதிமன்றங்களில் தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றது. தண்டனைகள் மூலம் சமூகத்தில் எழுகின்ற குற்றங்களை குறிப்பிட்டளவேனும் குறைக்க முடிகின்றது.

ஒரு சமூகத்தில் பலதரப்பட்ட மக்கள் கூட்டம் வாழ்கின்றார்கள். இந்தக் கூட்டத்தினிடையே படித்தவன், படிக்காதவன், தாழ்ந்தவன், உயர்ந்தவன், என்ற வர்க்கங்களும் உண்டு. இந்த வர்க்கங்களிடையே ஏற்படுகின்ற பலதரப்பட்ட குற்றச் செயல்களை தடுத்து தண்டனை வழங்கி நல்லதோர் சமூகத்தை உருவாக்கும் பாரிய பொறுப்பையும் செய்து கொண்டிருக்கின்றன.

*ப.ஸ்ரீகலா.*

முதன் முதல்
பெண்கள் உரிமைகள்
மாநாடு 1848இல்
நியூயோர்க்கில்
நடைபெற்றது





# எல்லாம் நாங்களே!



கூறுவிலை கேட்டு
கூசாமல் விளம்பரங்கள்
உயரம், நிறம்,வயது
அட.... மாட்டுச் சந்தையா!
இல்லை.. இல்லை.. மாப்பிள்ளைச் சந்தை.
விலை கூடும் இடத்திற்கே
விற்பனை செய்யப்படும் விதியிது.
அடியம்மா. உன் ஆண்மகன்
ஐந்தறிவு விலங்கா!
பெற்ற மகனை நீ விற்று
பெருமை பெறப் போகிறாயா?
சீதனச் சவுக்கு பெண்ணின் கையில்
சிறப்பாக அமைந்திருந்தால்
இந்தக் குதிரைகள் ஓடும்
வண்டி இழுக்கும் - சிலநேரம்
சண்டித்தனம் செய்யும்
அட... புதிராக இருக்கின்றதா
நாட்டில் நடக்கும் கதைதானே
ஆண்மையென்றால் வீரமாமே.
அது இப்போது பெண்களிடமல்லவா
அடைக்கலமாகி அடங்கிக் கிடக்கிறது.
ஆணைப் பெறுவதும் விலைக்கு விற்பதும்
கூறுவிலை கூறி கொள்வனவு செய்வதும்
எல்லாம் பெண்களே இப்போது சொல்லுங்கள்
இன்னும் நாம் அடிமைகளா.....

*நா. மனோண்மணி*

# தடைக்கற்களே ஏணிப்படிகளாக..

**அன்பான சகோதரியே! வாழ்க்கைப் பாதையில் மேடு, பள்ளங்கள் எறியப்படுகின்ற தடைக் கற்கள் எதிர் பாராமல் வரலாம். அதனால் நீங்கள் உங்கள் பாதையை மாற்றிக் கொள்ள வேண்டுமா? ஒவ்வொருவர் வாழ்விலும் துன்பங்கள், துயரங்கள், முட்டுக்கட்டைகள், தடைகள் ஏற்படுகின்றன. ஆனால் இவைபற்றி அலட்டிக் கொள்ளாமல் அவற்றை எமது முன்னேற்றத்தின் பக்கபலமாக ஆக்கிக் கொண்டால், அதுவே எமக்கு வெற்றியைத் தருவதுடன் எம் பின்னே வரும் சகோதரிகட்கு விழிப் பூட்டுவதாகவும் அமைந்து விடும். துன்பக் கடலில் அடிக்கடி நாம் தூக்கிப் போடப்படுவது துன்புறுத்தப்படுவதற்காக அல்ல. அந்தக் கடலில் நீந்திப்பழகவும் ,செழிப்பான ஒரு கரையைச் சென்றடையமட்டுமே என்பதை மனதிற் கொள்ளவேண்டும். என்ற வகையில் வாழ்வுப் பாதையில் ஏற்படக்கூடிய சில தடைகளையும் அதைச் சமாளிக்கும் வழியையும் நீங்கள் சிந்திப்பதற்காக சில சந்தாப்பங்கள் உங்களுடன் விரிகிறது.**


கமலி, அவள் துரு துருவென்ற செயற்பாடுடைய சுமாரான ஒரு அழகுச்சிறுமி. எப்போதும் எதையாவது செய்து கொண்டு சுழன்றோடித்திரியும் அவளிடம் ஏதோ ஒரு கவர்ச்சி. ஒரு தனிக்குடும்பம், பக்கத்து வீட்டில் இருந்த அம்மாவின் மாமா குடும்பம் தனது சொந்த ஊருக்குச் சென்றுவிட அங்கு வந்து குடியேறினார் ஒரு நடுத்தர வயது மாமா. மாமா ஐம்பத்தைந்தைத் தாண்டியிருக்கமாட்டார். மாமாவுக்கு இன்னும் திருமண ஆசைவரவில்லை என்பது பலரது அபிப்பிராயம். எல்லோருடனும் பழகுவதில் மிகவும் நல்ல சுபாவம் கொண்ட அவரிடம் எந்த விதத்திலும் குறை காணமுடியாது. அன்பாகப்





பழகும் அவருக்குள்ள ஒரேயொரு குறை அடிக்கடி ஏற்படும் பிடிப்புவியாதிதான். கமலியின் குடும்பம் அவரை மிகவும் நேசித்தது.

அவரின் பிடிப்பு நேரத்திலெல்லாம் அவருக்கு எடுபிடியாக இருப்பது கமலிதான். அவளும் பிறருக்கு உதவி செய்வதில் நல்ல விருப்பம் கொண்டவள். இதனாலோ என்னவோ அவளுக்கும், அவள் குடும்பத்திற்கும் மாமாவின் பரிசுகள் குறைவதேயில்லை.



நாட்கள் செல்லச் செல்ல மாமாவின் பிடிப்பு நோய் அதிகமாகிக் கொண்டே வந்தது. அவருக்கு இரண்டொரு அடி தூரத்திலிருக்கும் பொருட்களைக்கூட அவரால் எடுக்க முடிவதில்லை. எடுத்ததற்கெல்லாம் கமலியை அவர் கூப்பிடுவதும் கமலி சற்று மறுப்புக் காட்டுவதும் தாயினால் அவதானிக்கப் பட்டது. ஆனால் தாயிடம் இருந்து கமலிக்கு கிடைத்ததோ ‘மறுக்காமல் பெரியவர் பேச்சைக் கேள்’. என்ற அறிவுரையும் அதட்டலுமே. கமலி ஏன் மறுப்புக் காட்டுகிறாள் என்பதை அந்தத் தாய் அறிந்திருக்கவில்லை. பயம் ஒரு புறம். தன்னை ஒரு பெரிய மனுஷியாக நினைத்து ‘முத்தல்’ என்ற வகையில் மற்றவர்கள் எண்ணிவிடுவார்களோ என்ற வெட்கம் மறுபுறம்.

நாட்கள் நகர்ந்தன. அன்றொரு நாள் மாமா எண்ணெய்ப் போத்தலை எடுத்துவரச் சொன்னதும் அவள் வீட்டினுள் சென்றாள். மாமா எழுந்து பின்னால்ச் சென்று பல்லைக்காட்டியபடி நின்றதும் கமலிக்கு ஒரு பயத்தை ஏற்படுத்தி விட்டிருந்தது. இன்னொரு நாள் தண்ணீர் கொண்டு வரச் சொன்னதும் கொடுத்த போது எட்டிக் கையில் பிடித்து இழுத்து தழுவிக் கொண்டதும் மற்றவர்களுக்கு வித்தியாசமாகத் தெரியாவிடினும் அவளுக்கு அவர்மீது வெறுப்பை

ஊட்டிவிட்டிருந்தது. இத்தகைய பயமும், வெறுப்பும், கோபமும் அவளுக்கு இத்தடைக்கற்களைத் தாண்டும் துணிவை ஏற்படுத்திவிட்டிருந்தது.

ஆறாம் தரத்தில் படித்துக்கொண்டிருந்த அவளுக்கு அவளது கல்வியே அகக் கண்ணைத்திறந்து விட்டிருந்தது.

அடிக்கடி தொட்டுப் பழகுபவர்களிடத்தும் தம்மீது அதிக கரிசனை காட்டுவோரிடத்திலும் அவதானமாக இருக்கும்படி அவள் படித்த ஞாபகத்தால் அவள் உசுப்பிவிடப்பட்டிருந்தாள். 'இனியும் இதைப் பொறுக்க முடியாது எப்படியாவது மாமாவின் நல்ல பிள்ளைத்தனம் வெளிப்பட வேண்டும்'. என மனதுக்குள் முடிவெடுத்த அவள் தனது தாயிடம் முழுவதையும் முறையிட்டாள். அம்மாவோ இதை நம்புவதா? வேண்டாமா? என்று தடுமாறினாள். வெளியில் யாருக்காவது தெரிந்தால் அவர் பெரியவர். அதிலும் ஆண் தப்பிக் கொள்வான். கமலி வளருகின்ற பெண். அவளின் எதிர்காலம் என்னவாகும்?. இது அவளுக்கு ஒரு மாறாத வடுவை ஏற்படுத்தி விடுமே என அவள் மிகவும் வேதனைப்பட்டாள். எனினும் அவரின் நடத்தைகளை மௌனமாகக் கவனித்தாள். கமலியிடத்தில் அவரின் நடத்தைகள் எல்லை மீறிய விதத்தில் இருப்பதை மௌனமாகக் கவனித்துக் கொண்டாள். அன்றிலிருந்து கமலியை அழைக்கும் நேரமெல்லம் அங்கு ஆஜராவது அப்பாவாக இருந்தார். நாளடைவில் மாமாவின் பிடிப்புநோய் படிப்படியாகக் குறைந்ததுடன் தனது வேலைகளைத் தானே செய்து கொள்ளவும் மாமா பழகிக் கொண்டார்.

அன்பான சகோதரிகளே! கமலியின் தாய் விவேகியாகவோ அன்றி கமலி இதை முறையிடாமலோ இருந்திருந்தால் நிலை என்னவாகியிருக்கும்?. ஊர்வாய்க்கு அவல் வாய்த்தது போலவும் நாற்றிசையும் நல்ல பேர்கொண்ட மாமாவுக்கு அனுதாபத்தைப் பெற்றுத் தருவது போலவும் கமலியைப் 'பிஞ்சிலே பழுத்தது' என்று பலர் கதைக்கவும் இடமளித்திருக்கும். இன்று எத்தனையோ இடங்களில் சிறுபிள்ளைகள் மீதான இத்தகைய துஸ்பிரயோகங்கள் எல்லை





மீறிய அளவிலும் நடந்துள்ளன. இதற்கெல்லாம் காரணம் யார் என்றால் நிச்சயமாகப் பெரியவர்கள்தான். சமீபத்தில் பெருகிவரும் இத்தகைய சம்பவங்களை பலரும் அறிந்திருக்கக்கூடும். ஒரு நாட்டின் எதிர்காலச் சிற்பிகள் என வர்ணிக்கப்படும் சிறார்கள் இவ்வாறு அழிவுப்பாதையில் இட்டுச் செல்லப்படக்கூடாது.

அதிலும் சிறுமிகள் விடயத்தில் அதுவே அவர்களை தவறாக இட்டுச் செல்வதுடன் சிலரது வாழ்வில் ஒழுக்கத்தை அழிக்கும். சிலரது விடயத்தில் வாழ்க்கை என்பது வெறுப்புக்குரிய ஒன்றாகிவிடும்.

இவற்றை ஒழிக்க வேண்டுமாயின் நாம் இவ்வாறான சம்பவங்கள் பற்றியும், அவற்றில் இருந்து மீள்வது பற்றியும், எமது பெண் பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். பெண் பிள்ளைகளிடத்து பாலியல் பற்றிய அறிவை அதிகப்படுத்தும் போதுதான் சமூகத்தில் இத்தகைய சோகங்களை அழிக்க முடியும். இன்னும் எம்மவரிடையே பல யுவதிகள் பாலியல் அறிவு குன்றியவராக சமூகத்தில் இத்தகைய விபத்துக்குள்ளாகி தடுமாறியும் வாழ்வதை நாம் அறிவோம்.

எனவே அன்பான சகோதரிகளே! கமலி போன்ற சிறுமிகள் வாழ்வில் இத்தகைய தடைகள் ஏணிப்படியாக இருக்க வேண்டுமேயன்றி தடுக்கி விழக் காரணமாக இருக்கக்கூடாது. இத்தகைய பெண்களைத் தாக்கும் நடவடிக்கைகளை இல்லாதொழிக்க ஒவ்வொருவரும் புத்திக் கூர்மையுடன் செயற்பட வேண்டும். இத்தகைய மோசக்காரர்கள் இனங்காணப்பட்டு திருந்தும்படியாக செயற்பட வேண்டும். இத்தகைய மனிதர்களது முகமூடிகள் கிழிக்கப்படும் போதுதான் சமூகத்தில் பெண்கள் உயர்ச்சியும், மகிழ்ச்சியும் அமைதியும் வளர்த்தெடுக்கப்படும்.

**ஜெகதீஸ்வரி**

# பாரதப் பெண்களின் மற்றைய பக்கம்.



**வாசித்தவற்றிலிருந்து..................**

அமெரிக்கப் பெண் எழுத்தாளர் ஒருவர் இந்தியாவின் பெண் சாரதி ஒருவரைச் சந்தித்து அவருடன் அளவளாவிய போது அவர் சொன்னவை இவைதான் "எனது கணவர் என்னை நெருப்பிற்குள் தள்ளிவிட்டார். நான் ஏன் என்று காரணம் கேட்ட போது, எனது பெற்றோர் எனக்கு போதியளவு சீதனம் தரவில்லை என்று கூறினார். நாளும்பொழுதும் நான் வேதனைப்பட்டேன். உடலால் மட்டுமல்ல உள்ளத்தாலும் நான் நொந்து போய்விட்டேன். எனது உடம்பில் 60 வீதமான பகுதி எரிகாயங்களிற்கு உள்ளாகியுள்ளது நான் மூன்று மாதங்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தேன். எனது கைகளும், கழுத்துப்பகுதி தோல்களும் வெந்து சுருங்கிப்போய்விட்டன." என்று கண்ணீர் மல்கக் கூறினார் அந்த இந்தியப் பெண். இந்தியப் பெண்கள் சீதனம் என்ற பெயரில் அனுபவிக்கும் வேதனையை அறிந்து கொள்ள இதைவிடக் கொடுமையான ஓர் உதாரணம் தேவையிருக்காது.

சீதனம் என்ற பெயரில் சித்திரவதைப்படுத்தப்படும் இந்தியப் பெண்கள் வருடத்துக்கு 600 பேர் வரையில் புதுடில்லியில் மட்டும் நெருப்பிற்குள் தள்ளப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். படிக்காத பாமர மக்களை விட படித்த சமுதாயத்தினரே சீதனம் வாங்குவதால்தான் தாம் கௌரவப்படுத்துவதாக எண்ணுகின்றனர். இந்திய மண்ணில் பெண்ணாகப் பிறந்த ஒரேயொரு காரணத்திற்காக மட்டும் அவர்கள் படும் துன்பங்கள் சொல்லிமாளா. பெண்பிள்ளை ஒன்று பிறந்தவுடன் கள்ளிப்பால் வைத்து அவளது பெற்றோராலேயே கொல்லப்படுகிறாள் என்றால் மீதியை நாம் பார்க்கத் தேவையில்லை.





இந்தச் சீதனம் என்ற கட்டுபெட்டிக்குள் தாம் உட்பட்டு விடக்கூடாது என்பதற்காக தம் வாழ்க்கையை தாமே தீர்மானிக்க வேண்டும் என்று புறப்பட்ட பலரின் வாழ்க்கையும் கூட அர்த்தமற்றதாகிவிட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

மேலான நிலையில் நின்று சிந்திக்கும் இந்தியாவின் கல்லூரி மாணவிகள் பலர் காதலித்து திருமணம் செய்ய முற்படும் போது அவர்களின் பெற்றோர் அதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்து தமது பிள்ளைகளின் வாழ்க்கைக்கு தாமே ஆப்பு வைக்கின்றனர். ஆனாலும் அக்கல்லூரி மாணவிகளுடன் உரையாடும்போது அவர்கள் கூறுவதெல்லாம் "எமது வாழ்வை நாமே தீர்மானிக்க வேண்டும். வளர்ச்சியடைந்திருக்கும் இந்த உலகில் நாம் சாதிக்க வேண்டியவை ஏராளம்ஏராளம். ஆனால் எமது பெற்றோரும், எமது சமூகத்தின் பிற்போக்குத்தனங்களும் அர்த்தமற்ற வாதப் பிரதிவாதங்களும் எமது வளர்ச்சிக்கு தடையாகவுள்ளன. ஆனாலும் நாம் எமது முயற்சிகளை கைவிடமாட்டோம். எமது இளைய சந்ததியாவது இந்தப் போலிகளுக்குள் அகப்படக்கூடாது. அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும். எவ்வளவுதான் எதிர்ப்புக்களை நாம் சந்தித்தாலும் தனிப்பட்ட எமது சுதந்திரத்தில் பிறரின் தலையீடு இருப்பதை நாம் அறவே வெறுக்கின்றோம்" என்கிறார்கள்.

பாரதி.

**பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ, அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே.**

**கொன்பியூசியஸ்**

# நீங்கா நினைவில்..........



## தியாகதீபம்
## அன்னை பூபதி
## 19-03-2004 19-04-2004

**அன்று,**

**பசித்தீ வளர்த்து எம் உரிமைக்காய்**
**குரல் கொடுத்தாய்.**
**உயிர்மூச்செறிந்து**
**நீயுறங்கிய**
**மாமாங்க மண்ணும் எம் மக்களும்**
**உன் நினைவில்....**







# பாக்கியம் மாமியும் பரமேசுவரியும் பவித்திராவும்

பா.மாமி:- பிள்ளை பவித்திரா.... விடிய வெள்ளண... எங்க பிள்ளை போட்டுவாறாய்.

பவித்திரா:- அதெண மாமி... என்ர சினேகிதப்பிள்ளை ஒண்டு வவுனியாவில ஏதோ போய் பிரச்சனையாம் எண்டு அறிஞ்சன்... அதுதான் சொந்தக் காரரிட்டைப் போய் விசாரிச்சுக் கொண்டு வாறன்......

பா.மாமி:- என்ன பிரச்சனையாம் பிள்ளை?

பவித்திரா:- ஆக்கள் கனகாலமா இந்தியாவில அகதியளா இருந்தவை... தெரியும்தானே... அங்க கஸ்டம்... எங்கட இடம் மாதிரித்தானே...

பா.மாமி:- ஓம்பிள்ளை......

பவித்:- ஆரோ வெளிநாட்டில வேலை வாங்கித்தரலாமெண்டு சொல்லி கொஞ்சப் பொம்பிளையளை கூட்டிக் கொண்டு கொழும்புக்கு வந்தவையாம்...

பா.மாமி:- ஓ...ஓ... பேப்பரிலையெல்லம் உந்தச் செய்தி வந்ததெண்டு கேள்விப்பட்டனான்.... உண்மையா பிள்ளை...

பவித்திரா:- ஓமண மாமி... கொழும்பில கொண்டு வந்து வைச்சு... வெளிநாட்டுக்கு அனுப்பாம கொடுமைப்படுத்தியிருக்கிறாங்கள்... எப்பிடியோ அதால கொஞ்சப் பேர் தப்பி... வவுனியாவுல போராளியளிட்டைத் தஞ்சம் அடைஞ்சிருக்கினம்.....

பா.மாமி:- ஏன் பிள்ளை உந்தப் பெடிச்சியளுக்கு புத்தி உப்பிடிப்போனது இப்ப வீணா வாழ்க்கையை இழந்துபோய் நிக்குதுகள்...

பரமேசு:- மாமியும் பவித்திராவும் விடிய வெள்ளனவே கூட்டம் போட்டுட்டியள் போல..

பா.மாமி:- வா... பரமேசு... கொழும்பில கொஞ்சத் தமிழ்ப் பொம்பிளையளுக்கு நடந்த அநியாயங்களைப் பற்றிக் கதைக்கிறம்....

பரமேசு:- ஓமண றேடியோவிலையும் சொன்னது கேட்டனான்... இந்தப் பொம்பிளையளுக்கு ஏனணை இந்தப் புத்தி...

பவித்திரா:- வெளிநாட்டு மோகத்திலை... சிந்திக்காம எடுத்த முடிவாலை தான் இதெல்லாம் நடந்தது... பொம்பிளையள் உழைக்கத்தான் வேணும்...





சேமிக்கத்தான் வேணும்... குடும்பத்தின்ரை பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்க்கத்தான் வேணும்...

பா.மாமி:- அப்ப... உப்பிடிபோய் சீரழிஞ்சு நிக்கிறது சரியெண்டோ நினைக்கிறாய்....

பவித்திரா:- இல்லையணை... அதுக்கு சரியான மார்க்கத்தை தெரிஞ்செடுக்கேல்லை. எண்டுதான் சொல்லுறன்... இவையைப்போல ஏஜென்சியளை நம்பி தற்கொலை செய்த பெண்களையும்.... அங்கையும் அவலம் சுமந்து கண்ணீரோடை வாழுற தற்கொலை செய்த பெண்களும் இருக்கினம்...

பா.மாமி:- இந்த அவலங்களில் இருந்து மீள ஏலாதோ... பிள்ளை...

பவித்திரா:- மீளத்தானணை வேணும்... அறிவுரீதியாக சிந்திக்க வேணும்... நல்லவற்றை தெரிவுசெய்ய வேணும்... ஆதாரபூர்வமானவற்றை ஏற்றுக்கொள்ள வேணும்... அநாகரீகமானதுகளை தவிர்த்துப்போட வேணும்... எங்களுக்கு நடக்கிற எதுக்கும் நாங்கள்தான் பொறுப்பு எண்டதை புரிஞ்சு கொள்ள வேணும்...

பா.மாமி:- ஓம்பிள்ளை... நீ சொல்லுறது எங்களுக்கு விளங்குது... எல்லாப் பொம்பிளையளும் சிந்திக்க வேணும்... செயற்பட வேணும்...

✦✦✦

# சிறுவர்களும் தண்டனைகளும்

குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் இருக்கும் செறிவான, ஐதான உறவின் பரிமாணத்தைப் பொறுத்தே குழந்தைகளின் உடல் உளவளர்ச்சி கனம் பெறுகிறது.

தண்டனை என்பது பல வடிவங்களைப் பெறுகின்றது. தண்டனை வழங்கப்படும்போது அதில் கலந்து கொள்வோர் (தண்டனைக்கு உள்ளாவோன், தண்டனை வழங்குவோன்) என இரு பிரிவினராகக் காணப்படுகின்றனர். வயது உடல் உள வளர்ச்சி என்பனவும் மாறுபடுகின்றன.

இந்த வகையில் தண்டனையின் வீச்சு எத்தகையதாக அமைகிறது என்பதை யாரும் கவனத்தில் கொள்வதில்லை. தவறு செய்யும் ஒருவரை திருத்தும் முயற்ச்சியில் அல்லது பழிவாங்கும் பாங்கில் அமையும் இந் நடைத்தையானது ஒருவகை மனப்பாங்கை வெளிப்படுத்துகின்றது எனலாம்.

ஒருவர் விடும் சிறுதவறையும் பெரிதுபடுத்தி எப்படியாவது தவறு விட்டவரை தண்டனை என்னும் கூட்டுக்குள் சிக்க வைப்பதில் இருக்கும் ஆழ் புல உணர்வு வழிப்படுத்தல், மன்னித்தல் என்பதில் இருந்து விழகிப் பழிவாங்குவதில் தீவிர கவனம் செலுத்துகிறது என்பதுதான் உண்மை.

சிறு தவறுகளில் மனிதநடத்தையானது பெரிய அளவிலான குற்றச்செயல்களுக்கு வழிசமைப்பதும் சிறு தவறுகளைச் செய்பவர்கள், நெறிப்படுத்தலில் ஏற்படும் முறைகேடுகளால் வளர்ச்சி கண்டு, மீள முடியாத கரடுமுரடான பாதைக்குள் தள்ளப்படுவது, அதுவே வாழ்க்கையாகிவிடுகிறது.





எனவே குழந்தைகளின் விடயங்களைப் பெரியவர்கள் அலட்சியப் போக்குடன் அணுகுதல் என்பது பாரதூரமான விளைவுகளுக்குத் தள்ளி விடும் என்பதை உணர வேண்டும்.

தண்டனை வழங்குவதன் மூலம் குழந்தைகளை நெறிப்படுத்தலாம் என்பது பலரது நிலையாகக் காணப்படுகின்றது. அந்த நிலைப்பாடு எத்துணை பொருத்தமுடையது என்பது கேள்விக் குறியாகும். தண்டனைகள் பல வடிவங்களில் காணப்படுகின்றது. உதாரணமாக சில விடயங்களை இங்கு சுட்டிக் காட்டலாம்.

குழந்தைகள் எப்போதும் அடம் பிடிப்பார்கள் அந்தச் சின்ன வயதில் எப்பொருள்களையும் தன்னுடன் வைத்திருக்க விரும்புவார்கள். அதை நாம் . தடுக்க முயலுவோம் அல்லது பறித்து ஒழித்து விடுவோம். இதனால் அக்குழந்தை அடக்க முடியாத வேதனையால் அழத் தொடங்கும். இதனால் ஆத்திரம் அடையும் பெரியவர்கள் குழந்தையை அதட்டி அடக்க முயலுவதும், அடங்காத குழந்தைக்கு அடித்து அச்சுறுத்தவும் தலைப்படுகிறார்கள். இதனால் அந்தப் பிஞ்சு உள்ளமே பாதிக்கப்படுகிறது. உடல் உபாதைக்கும் ஆளாகிறது.

மேலும் சில குழந்தைகள் உணவு உண்பதில் விருப்பமின்மையினால் உண்ண மறுக்கிறார்கள். இந்த வேளையில் பெரியவர்கள் உண்ணாததற்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறியாமல் குழந்தையை அடித்து துன்புறுத்தி உணவை ஊட்ட முயல்கிறோம் என்பதைவிட, உணவை வாயில் திணிக்கிறார்கள். என்பதே பொருந்தும். உண்ணமுடியாத அளவு உணவு முழுவதையும் ஊட்டிவிட முயல்வதும் ஒரு வகைத் தண்டனையாகவே கருதக்கூடியதாக உள்ளது.

மன அழுத்தங்கள், உடல் உழைப்பால் ஏற்படும் தளர்ச்சியுடன் கொதிப்படைந்துவிடும் பெரியவர்கள் தங்கள் குழப்பங்களுக்கு காரணம் காணப்படும் வேளைகளில் தமது மனக்கொதிப்பை அடக்க முடியாத வேளைகளில் பிள்ளைகளின் செயல்களால் மேலும் கொதிப்படைந்துவிடும் பெரியவர்கள் தங்கள் குழப்பங்களுக்கு காரணம் கற்பித்து குழந்தைகளுக்கு தண்டனை வழங்கி தம்மைத்தாமே திருப்திப்படுத்துவதில் முனைப்புடன்

காணப்படுகின்றனர். இது எவ்வளவு அனர்த்தமான செயல் என்பதை பெரியவர்கள் உணர்வதில்லை.

குழந்தைகள் ஆத்திரம் அடையும் போதெல்லாம் தமது கையில் கிடைக்கும் பொருட்களை உடைத்தோ அல்லது வீசியோ சேதப்படுத்தி விடுகின்றனர். இந்த வேளைகளில் பெரியவர்கள் குழந்தைகளை அழைத்து ஆதரித்து, அறிவு சொல்லி அவர்களின் தவறுகளைத் திருத்த முனைவதில்லை. மாறாக கையாலோ தடியாலோ அவர்களுக்கு தண்டனை வழங்கி விடுவார்கள்.

இதுபோலவே கற்பதில் அக்கறையற்றவராக இருக்கும் குழந்தைகள் புத்தகங்களைக் கிழிப்பதும் கீறுவதும் தொலைப்பதும் உண்டு. அத்தகைய குழந்தைகளும் விசாரணை, ஏச்சு, அடி, உதை என்ற துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இந்த அணுகுமுறையானது குழந்தைகளின் ஆழ் மனதில் பாரிய தளும்புகளை உண்டுபண்ணிவிடுவதைப் பெரியோர்கள் உணர்வதில்லை. இத்தகைய தண்டனை முறைகள் பிள்ளைகளின் ஆழ் மனநிலையில் ஏற்படுத்தும் துன்பப்பதிவுகள் அப்பிள்ளையில் எதிர் விளைவுகளை ஏற்படுத்துவதையே எல்லோரும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

> "சிறு தவறுகளில் மனிதநடத்தையானது பெரிய அளவிலான குற்றச் செயல்களுக்கு வழிசமைப்பதும் சிறு தவறுகளைச் செய்பவர்கள், நெறிப்படுத்தலில் ஏற்படும் முறைகேடுகளால் வளர்ச்சி கண்டு, மீள முடியாத கரடுமுரடான பாதைக்குள் தள்ளப்படுவது, அதுவே வாழ்க்கையுமா?"





நாம் ஆய்வின்றி, உணர்ச்சி வசத்தில் ஆழமான சிந்தனையின்றி, அவசரத்தில் எடுக்கும் முடிவுகள் பொருத்தமற்றதாக காணப்படும் போது, எமது ஆத்திரமும், மனப்பாரமும் மட்டுமே இறக்கி வைக்கப்படுகிறது. இதனால் குழந்தைகளுக்கு எந்த வித நற்பயனும் கிட்டுவதில்லை.

மனிதன் எப்போதும் தனது அழுகைக்குள் மற்றவர்கள் இருப்பதையே குறியாகக் கொண்டுள்ள இயல்பாகக் காணப்படுவதால் தனது விருப்பத்திற்கிணங்க நடத்தையமையாதவர்கள் மீது தண்டனை வழங்கும் இயல்புகளையும் கொண்டிருத்தலைக் காண முடிகின்றது.

இந்த மனப்பாங்கு மாற்றம் பெறும் வரை குழந்தைகளின் உரிமைகள் பறிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும்.

பூப்போன்று அந்த மென்மையான மனங்கள் வாடி வீழ்ந்து விடாமல் பாதுகாப்பதாலேயே எதிர்கால விருட்சங்கள் வேரூன்றி வளரும். பூ காயம்பட்டு வாடி விழுந்துவிடுமானால் வெறும் சருகுமட்டுமே மிஞ்சும் என்பதைப் பெரியவர்கள் கருத்தில் கொள்ளுதல் நல்லது.


சிறுவர்களின் அல்லது பெரியவர்களின் நெறிப் பிறழ்விற்கு வழி வகுப்பது பெரியவர்களே அன்றி சிறுவர்கள் அல்ல.

சிறுவர்கள் தம்மைப் பெரியவர்களாகப் பாவனை செய்வதும் பெரியவர்களின் நடத்தைகளைப் பின்பற்றுவதும் இயல்பானது.

குடிப்பழக்கம், புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ள பெரியவர்கள் தங்கள் செயற்பாடுகளால் ஒரு வழியில் குழந்தைகளின் மன எழுச்சிக்கும் தூண்டலுக்கும் வழிகோலுகிறார்கள்.

சில சிறுவர்களைக் கொண்டு மது மற்றும் புகைப்பதற்குப் பயன்படும் பொருட்களை வாங்கிவரப் பணிப்பார்கள். அதன் தொடுகை உணர்வால் உந்தப்படும் சிறுவர்கள் ஆரம்பத்தில் பரீட்சார்த்தமாகச் சுவைத்துப்பார்ப்பதும், பின்னர் அதைப் பொழுதுபோக்காக கொள்வதும் பின்னர்

அதையே வழக்கமாக்கிவிடுவதும் அது வீடுவரை தெரிய வந்துவிட்டால் பெரியவர்களின் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவதும் வழமையாகிவிட்ட விடயங்கள்.



இது போன்ற வகையில்தான் ஒவ்வொரு விடயங்களும் நடைபெறுவதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

சிறுவர்களைத் தம்முடன் வைத்துக்கொண்டே பெற்றோர்கள் தமது முரண்பாடுகள் பற்றிக் கதைப்பதும், சச்சரவில் ஈடுபடுவதும் சண்டைகள் பிடிப்பதும் சாதாரணமாக வீடுகளில் நடைபெறுகின்ற சம்பவங்களாகின்றன. இதே முறையைப் பிள்ளைகளும் கற்றுக்கொண்டு சண்டையிட்டால் அதற்கு உடனே பெற்றோர் தண்டனை வழங்கி விடுவதுண்டு.

சிறுவயதிலே வறுமை காரணமாக வீடுகளில், தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் சிறு வயதினர் மோசமான தண்டனைக் குள்ளாவதும், அதனால் அவர்களின் மனம் உடைந்து போவதும் வழமையாகிவிட்டது.

கடுமையான வேலைப்பழுவால் அச் சிறுவர்கள் நொய்ந்து போவதும், அவர்கள் மீள முடியாத துன்பங்களை அடைவதும் சிறுவர்களின் மன விரக்தியைத் தூண்டுகிறது.

வேலைக்காரச் சிறுவர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகளின் கனதி அதிகம். ஏனைய குழந்தைகளை விட இவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் அதிகம்.

இவர்களுக்குத் தேவையான அளவு உணவு, உடை, மதிப்பு என்பன கிடைப்பதில்லை. அதிலும் அவர்கள் மனித நேயத்துடன் பார்க்கப்படுவதில்லை.

தண்டனைகளும் கொடுமைகளும் கொடூரமானவையாகவே கொடுக்கப் படுகின்றன. அடியும், உதையும் ஒரு பொருட்டல்ல அறைகளில் தனிமையில் பூட்டி வைக்கப் படுவதும், பாலியல் துன்புறுத்தல் களுக்கு ஆளாக்கப்படுவதும் தீயினால் சுடப்படுவதுமான மோசமான தண்டனைகளை அடைகிறார்கள்.

இதனால் இவர்கள் இளமையிலே முதுமையடைந்து விடுகிறார்கள். இலக்கற்ற ஒரு பயணத்தில் சமூக





அலைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் அடித்துச் செல்லப்படுகிறார்கள். இவர்களின் எதிர்காலம் சிக்கல் நிறைந்ததாகவே அமைவதைக் காணலாம்.

எனவே குழந்தைகளின் விடையத்தில் சிறந்த அணுகுமுறைகளை பெரியவர்கள் கடைப்பிடிக்கத்தவறும் பட்சத்தில் எதிர்காலத்தில் சிறந்த சமுதாயத்தை காணும் வாய்ப்பு தவறவிடப்படும். சமுதாயம் கொடூரமான விளைவுகளையே அறுவடை செய்ய நேரிடும்.

இளைய சமூகத்தினர் எதிர்காலத்தில் பின்வரும் விளைவுகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கு நாம் முயல வேண்டும்.

01. மற்றவர்கள் மீது அதிகாரத்தைப் பிரயோகித்து மனங்களை உடைக்கும் மனப் போக்கில் இருந்து மாறவும்.

02. தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வன்போக்காளராக, பழி வாங்குவோராக மாறுவதில் இருந்து தடுக்கவும்.


03.மற்றவர்களிடம் இருந்து காண்பவற்றையும் கேட்பவற்றையும் தம்முள் பாவனை செய்வதில் சரியானதையும் தவறானதையும் புரிந்துகொள்ளும் வகையில் மாற்றமுறவும்.

04. பாலியல் துஸ்பிரயோகத்தால் ஏற்படும் விரக்தியையும், பாலியல் வன்கொடுமையாளராக மாறுவதில் இருந்தும் பாதுகாக்கவும்.

05. தாம் அடைந்த தண்டனையை மற்றவர்களுக்கு வழங்கும் இயல்பினன் ஆதலைத்தடுக்கவும்.

பெரியவர்கள் சிறுவர்கள் மீது ஆதரவை அன்பைக் காட்டி நன்நடத்தை உடையவர்களாக தம்மை மாற்றிக் கொள்வதும் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்படுதலும் அவசியமாகிறது.

விளைவுகள்:-



① சிறு வயதில் கடுமையான தண்டனைகளைப் பெறும் குழந்தைகளே பிற்காலத்தில் மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்துவோராகவும், பழி வாங்குவோராகவும் மாறுகின்றன.

➀ சிறுவயதில் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத சிறுவர்கள் பிற்காலத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வன்போக்காளராக மாறுகின்றனர்.

➀ சிறுவர்கள் தாம் அவதானிப்பவைகளை பாவனை செய்யும் இயல்புடன் சமூகத்தில் தவறுகளையும், சரிகளையும் புரிந்து கொள்ளாமலே கற்றுக்கொள்கின்றனர்.

➀ பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்படும் சிறுவர்கள் பிற்காலத்தில் விரக்தியுற்றவர்களாகவும், பாலியல் வன் செயலாளராகவும் மாறுகின்றனர்.

➀ தண்டனைகளை அனுபவிப்பதன் மூலம் பாதிப்படைந்த குழந்தைகள் பின்னர் தண்டனை வழங்குபவர்களாகவும் , தண்டனைக்கு அஞ்சாதவர்களாகவும் மாறுகின்றனர்.

எனவே பெற்றோர்களாயினும் சரி பெரியவர்கள், இளைஞர்கள், யுவதிகளாயினும் சரி, குழந்தைகள் வளர்ச்சியில், அவர்களின் எதிர்கால மலர்ச்சியில் மிகவும் அவதானமாகவும்; நிதானமாகவும் செயற்படுவதன் மூலமே ஒரு நற்பிரஜை உருவாக்கத்திற்கு வழிசமைக்க முடியும்.

முருகு.பாரிமகன்

வாய்ப்பு வரும் வரும் என்று யாரும் காத்திருக்க வேண்டாம். அந்த வாய்ப்புக்களை நீங்களே தேடித்தான் உருவாக்க வேண்டும். சந்தர்ப்பத்தை உருவாக்குங்கள். வெற்றியை ஈட்டுங்கள்.

பேர்னாட்சோ.





# ஒரு தென்றலின் வருகை

காலம் கரைகிறது.
நிழல்களின் வருகையின்றி
வெம்மையாகி
கனக்காத காற்றுக்கள்
நெருப்பை சொரிய
நீண்ட வெளிகளுக்கப்பால்
பசுமை தெரிவதாய்.
குழந்தைகள் சுடுமணல் வெளியில்
குதிக்கின்றன.
எந்தவித அதிர்வுகளும் இன்றி
நாம் தான் அவதியுறுகின்றோம்.
கண்களில் பீதியோடு
அங்கலாய்த்தபடி
இரவுகளின் மௌனிப்பில்
நட்சத்திரங்களின் வீகாசிப்பில்
உதிர்ந்து போன
உறவுகளைப்பற்றிய
நினைவுச் சுமைகளோடு
தொலைந்து போகின்றன நாட்கள்
ஒரு ஒளிக்கீற்றின் வருகை
இருள் பற்றிய பீதியினை
இல்லாமல் செய்யலாம்.
ஒரு தென்றலின் வருகை
தூசி படிந்த பக்கங்களினை
அழகாக்கலாம்.

கொற்றவை

# வாழ்விழந்தவர்கள்?



## "ஹாய் நிதி"

" ஹாய்... சுதா எப்படி சுகமாய் இருக்கிறாயா?" கேட்ட நிதியின் கண்கள் சுதாவின் நெற்றியையும், கண்களையும் ஆராய்ந்தன. பொய்க் கோபத்துடன் கைகளை மடக்கி நிதியின் வயிற்றில் குத்தினாள் சுதா. குத்தை வாங்கிச் சிரித்தபடியே " சுதா நான் போன முறை சொன்னதைப்பற்றி யோசிச்சனியா?"

"ம்..ம்.. யோசிச்சன்.. யோசிச்சன் ஆனா உனக்குப் பொருத்தமா ஒரு பொடியனும் மாட்டேல்ல" என்று பாவனையுடன் கூறினாள் சுதா.

"சுதா பகிடி விடாத உனக்கு இப்ப என்ன வயசு ஏனடி இப்படியே இருக்கிறாய். கலியாணத்தைப்பற்றி தயவு செய்து யோசி சுதா" சற்றே உரத்து வெளிப்பட்டது நிதியின் குரல்.

சுதா பதறிப் போனாள் "ஐயோ நிதி மெதுவாகக் கதை ஆரின்ரையும் காதில் விழுந்தால் வம்பாய்ப் போகும். போன முறை நீ கதைச்சதைக் கேட்டு ஊருக்குப் போய் சுதாவிற்கு கலியாண ஆசை வந்திட்டுது என்று கதை பரப்பிப் போட்டுதுகள். என்னோட வந்த சனங்கள். உனக்கு புண்ணியமாய் போகும் மெதுவாக கதை.

"சரி.. சரி.. பதறாதை நான் கதைக்கேல்ல நீ எப்பதான் உனக்காக வாழப்போறாய் அவையள் ஏதும் சொல்லுவினம், இவையள் ஏதும் சொல்லுவினம்





எண்டு பயந்து, பயந்து சாகாதை நீ எல்லாருக்காகவும் வாழ்ந்தது போதும். உனக்காகவும் வாழ வேணுமெண்டு யோசி... சரி சுதா கதையோட கதையாய் வீட்டை வந்தாச்சு இரு நான் தேத்தண்ணீ போட்டுக் கொண்டு வாறன்". என்றபடி நகர்ந்தாள் சுதா.

சுதாவின் நெஞ்சில் இருந்து நெடுமூச்சொன்று வெடித்துக் கிளம்பியது மனம் ஊமையாய் ஓலமிட்டது. நிதிக்குச் சொல்லாத எத்தனையோ நிகழ்வுகள் நெஞ்சில் நிழற்படங்களாயின.

வறுமைப்பட்ட குடும்பத்தில் பிறந்தாலும் தமது வறுமைகளைத் தாங்காது வளர்த்த பெற்றோர் இருபது வயதிலேயே இனிய இல்வாழ்வு பற்றிக் கனவு காண வைத்த யோகன். ஓ... எத்தனை இனிய நாட்கள் இரு வீட்டாருக்கும் பயந்து மறைந்து மறைந்து சந்தித்துக் கதைத்துக் கொண்ட இனிமையான பொழுதுகள். வீட்டாருக்கு தெரிந்த போது பட்ட அடிகள். ஆயினும் பிடிவாதமாய் எல்லோரையும் மீறி சுதா, திருமதி சுதா யோகனாக மாறிய இனிய நாள் அன்று வயிரெரிந்து வந்து விழுந்த வசவுகள் அன்று அதை அலட்சியப்படுத்தினாலும் இன்று அவை பெரும் அம்புகளாய் நெஞ்சைத் துளைத்தது.

"என்ன சுதா கடுமையான யோசனை இந்தா தேத்தண்ணியைக்குடி" ஆதரவாய் தோள்பற்றி அழுத்தினாள் நிதி.

கண்கள் கலங்க நிதியைப்பார்த்தாள் சுதா. ம்... தேத்தண்ணியைக்குடி பிறகு கதைப்பம் என்றாள் நிதி. சுதா மௌனமாக தேனீரைப் பருகினாள்.

நிதி உனக்கு நான் புருஷனை இழந்தவள் என்று மட்டும்தான் தெரியும். மற்றவையின்ரை பார்வையில் நான் ஓர் விதவை ஒரு பிள்ளைக்குத் தாய் இதுதான் தெரியும். ஆனா நானும் ஒரு மனுஷப்பிறவி எனக்கும் உணர்ச்சிகளும், ஆசைகளும் இருக்கும் என்பதை ஆருமே புரிஞ்சு கொள்ளுகினமில்லை. ஏன் நிதி எனக்கு புருஷன் செத்துப்போனா.. சந்தோசமாய் இருக்கிற உரிமையும் போயிட்டுதா? கலங்கி வழியும் விழியுடன் கேட்ட சுதாவிற்கு பதில் கூறமுடியாது தவித்தாள் நிதி.

சுதாவின் குரல் அழுகையும், ஆவேசமுமாகவும் வெளிப்பட்டது. நிதி இருபது வயசில இருந்து ஆறுவருஷம் உருகி உருகிக் காதலிச்சம்.

எல்லா எதிர்ப்பையும் மீறி கலியாணம் செய்தம். இரண்டு வருஷ வாழ்க்கை சொர்க்கம் எண்டா இப்பிடித்தான் இருக்கும் எண்டு நினைக்கிற அளவுக்கு சந்தோசமா இருந்தம். எல்லாமே.... எல்லாமே இரண்டு வருஷத்தில ஆட்டம் காணத் தொடங்கியது. காச்சல் , தலைச்சுத்து எண்டு அடிக்கடி வருத்தமாய் படுக்கத்தொடங்கினார். இந்த ஆரவாரத்துக்குள்ள எனக்கும் தம்பி பிறந்திட்டான். பிள்ளை பிறந்த சந்தோசத்தைக்கூட அனுபவிக்க ஏலாமல் கொழும்பு, வவுனியா, கண்டி எண்டு மாறி மாறி ஆஸ்பத்திரிக்கு அலைஞ்சதுதான் மிச்சம். என்ன வருத்தம் எண்டு தெரியாமலேயே என்னையும் பிள்ளையையும் விட்டுட்டு நிலவன் போட்டார். எனக்கு அழக்கூட அவகாசம் தரல்லை. எங்கட சமூகம் வாழ்வுக்கு வராத உறவுகள் எல்லாம் சாவுக்கு வந்திச்சுது. வந்த உறவுகள் சும்மா வரல்ல தங்கட சம்பிரதாயங்களை மூட்டை கட்டிக்கொண்டுதான் வந்தவை.... சுதா தொண்டையடைக்க கண்கள் கலங்க அந்த நாள் நினைவுகளில் சிக்கித் தவிப்பது நிதிக்குப் புரிந்தது. ஆதரவாக அவள் தலைகோதிவிட்டாள் நிதி.

உனக்குத் தெரியுமா நிதி.. சின்ன வயசில பெரிய கறுத்தப் பொட்டு வைச்சு அம்மா வடிவு பாத்தா. பிறகு விதம், விதமாய் ஒட்டுப் பொட்டு வச்சு வடிவுபார்த்தன். கலியாணம் செய்தபிறகு பெரிய குங்குமப் பொட்டு வைச்சன். யோகன் செத்தவுடன் எனக்கு எதுவுமே தெரியல்ல. தம்பி பாலுக்கு அழுகிறானா படுத்திருந்த நான் தலையை உயத்தினன் நிதி ஓடி வந்த வயசில பெரிய பொம்பிள இனியும் உனக்கென்ன பொட்டு எண்டு சொல்லிக் கொண்டு கையை நெத்தியில வைச்சு ஒரு இழுவை. என்னால தாங்க ஏலேல்ல. நிதி எந்தப் பொட்டு எனக்கு வடிவு எண்டு யோகன் சொன்னாரோ எந்தப் பொட்டைத் தான் இல்லை எண்டாலும் அழிக்கக்கூடாதென்று சொன்னாரோ அந்தப் பொட்டை அவற்றை பிரேதம் வீட்டை வாறக்கிடையில அழிச்சது இந்தச் சமூகம். புருஷனை இழந்தவளை அனுதாபத்தோட பாக்க வேண்டாம்.

ஒரு மனுசப்பிறவியா எண்டாலும் பாக்க எப்ப நிதி பழகப்போகுது" சுதாவின் கேள்விக்கு நிதியால் பதில் கூறமுடியவில்லை. என்னால அழக்கூட முடியேல்ல நிதி. ஆனா ஊருக்குப் பயத்தில அழுதன். ஆருக்கு அழுறன் எண்டு தெரியாமல் கதறிக் கதறி அழுதன் நிதி. நினைவுகளில் உடல் குலுங்க அழுதாள் சுதா. சற்று நேரத்தில் தன்னை சுதாகரித்தபடி கொண்ட சுதா தொடர்ந்தாள்.

கூறையைக் கிழிச்சு தாலிக்கொடியைக் கழட்டி நினைச்சதெல்லாம் முடிச்சு நிதி. அண்டைக்கு எங்கட சுற்றம் செய்த கொடுமை எல்லாம் முடிஞ்சு ஒரு மாதம் முடியேல்ல. எனக்கு வேலை கிடைச்சுது. நான் முதல்க்கிழமை வேலைக்குப் போனன். ஒரு பிரச்சனையும் இல்லை. இரண்டாவது கிழமை வேலைக்குப் போனன் அந்த நிறுவனத்தில் வேலை செய்யிற வயசில மூத்த ஒரு பொம்பிள வந்து.

"சொல்லுறன் எண்டு குறைநினைக்காத பிள்ள.. புருஷன் செத்து இப்பதான் ஒரு மாசம் முடிஞ்சிருக்கு. அதுக்குள்ள நீ இப்பிடி நாளுக்கொருசாறி கடும் நிறங்களில கட்டுறது அவ்வளவு நல்லாயிருக்காது. வேணுமெண்டா எனக்கு வெளிநாட்டால வந்த இரண்டு, மூன்று சாறி இருக்குது எல்லாம் உன்னை மாதிரிப் பொம்பிளையள் கட்டக் கூடியது. நான் என்னண்டு அதுகளைக் கட்டுறது. அதால அப்படியே கிடக்கு. நான் அதைக் கொண்டு வந்து தாறன். எண்டு மனசில ஈரமே இல்லாமல் சொன்னா. அந்த ஐம்பது வயசிலையும் நெத்தி நிறையக் குங்குமம். வண்ண வண்ண சாறியுமா வாற அவவால புருஷன் இல்லையெண்டதுக்காக வெள்ளைச் சீலை கட்ட வேணும் எண்டு எதிர் பார்த்த அவவைக் கழுத்தை நெரிச்சுக் கொல்ல ஆசை வந்திது. ஆனா அடக்கிக் கொண்டு இல்ல அன்ரி எனக்கு அது வேண்டாம் உங்களுக்கும் ஒரு காலத்தில அது தேவைப்படும் கவனமாய் வைச்சிருங்கோ எண்டு சொல்லிப் போட்டு விறுவிறெண்டு போட்டன்.

அவவுக்கு ஆத்திரம் தாங்கேல்ல உடன இது நன்மைக்கு காலமில்ல, அது சரி.. இனியும் ஆரை மயக்கவோ இந்த அலங்காரம். எண்டு என்ரை காதுபடவே சொன்னதைக் கேட்டுத் துடிச்சுப் போனன்". சற்று மூச்சு வாங்கிக் கொண்ட சுதா தொடர்ந்தாள்.

இது மட்டுமில்ல யோகன்ர படம் பெரிசாக்கிக் கொழுவியிருந்தது. அதைப் பாக்கப்,பாக்க துக்கத்தில் இருந்து என்னால மீள ஏலாமல் இருந்திச்சு. அதால படத்தைக் கழட்டி வைச்சிட்டன். வீட்ட வந்த உறவுகள் இதுக்குச் சொன்ன விளக்கம் சரி.... ஆருக்கோ வலைவிரிச்சாச்சு அதுதான் மூத்தவன்ரை படம் கழட்டியாச்சு. இப்பிடி எத்தினை, எத்தினை சொல்லம்புகள். என்ர நிலை என்ர எதிரிக்குக்கூட வரக்கூடாது. ஆத்திரத்துடனும், அழுகையுடனும் தனது உணர்வுகளைக் கொட்டினாள் சுதா.

இந்தச் சமூகத்துக்குப் பயந்து,பயந்து மனம் விட்டுச் சிரிக்காமல்,

கதைக்காமல் ஒரு வருஷம், இரண்டு வருஷமுமில்லை நிதி. நீண்ட நெடிய ஆறு வருஷங்கள் எனக்குள்ள நானே ஆமைபோல அடங்கிப் போனன். ஆனாலும் நானும் ஒரு மனுஷப் பிறவிதானே எனக்கும் எல்லா உறவுகளின்ர பரிவும், பாசமும் தேவை எண்டிறதை ஏனோ ஏற்க மறுக்குது இந்தச் சமூகம். நிதி இதுவரையில நான் எனக்காக வாழவுமில்லை ஏன்... அழக்கூட இல்ல. நான் அழுதது ஆரம்பத்தில ஊருக்குப் பயத்தில, பிறகு யோகனுக்காக, அதுக்குப் பிறகு என்ரை பிள்ளைக்காகத்தான் அழுதன். எனக்காக எண்டு வாய்விட்டு அழக்கூட முடியேல்ல நிதி.

இந்த நிலையில் நீ என்னை மாறச் சொன்னா எப்பிடி? எப்பிடி நிதி முடியும். நிதி உனக்குத் தெரியுமா? எல்லாரும் சொல்லினம் நான் வாழ்விழந்தவள் எண்டு ஆனா வாழ்க்கை எண்டா கலியாணம் மட்டுந்தான் எண்டிறது ஏற்க ஏலாமல் இருக்கு. என்ரை வாழ்க்கையில் ஒரு பகுதிதான் கலியாணம் நான் புருஷனை இழந்திட்டன் எண்டிறதுக்காக வாழ்க்கையையே இழந்திட்டன் எண்டிறது என்னால ஏற்றுக்கொள்ள ஏலேல்ல நிதி.

ஆனா உன்னட்டை இப்பிடி உரத்துச் சொல்லுற மாதிரி இந்தச் சமூகத்துக்கு முகம் கொடுத்துச் சொல்ல என்னால ஏலாது. என்டைக்கு என்னைப் போல பொம்பிளையள் உரத்துக் குரல் குடுக்கினமோ அண்டைக்குத்தான் நீ சொல்லுற மறு விவாகம் சாத்தியப்படும். அது வரையில நாங்கள் வாழ்விழந்தவர்கள்தான்.

*நா. மைதிலி*

**ராஜஸ்தானில் விதவைகள் கறுப்புச் சேலை கட்டுகிறார்கள். ஆனால் சுமங்கலிகளோ வெள்ளைச் சேலை கட்டு கிறார்கள்.**

முத்தாரம்





# நூல் அறிமுகம்






**போராளிக் கவிஞர் அம்புலியின் மீண்டும் துளிர்க்கும் வசந்தம் கவிதை நூல் வெளிவந்திருக்கிறது.**

**நீண்டகாலமாகவே போராட்டக் கவிதைகளையும் எம் மண் சார்ந்த படைப்புக்களையும் எழுதிவரும் இக் கவிஞரின் முதலாவது படைப்பு கனதியான படைப்பாக இக் கவிதை நூல் அமைந்திருக்கிறது.**

**ஆயிரத்துத்தொழாயிரத்து தொண்ணூறுகளில் இருந்து இன்றுவரை எழுதப்பட்ட கவிதைகளில் முக்கியமானவற்றைத் தொகுத்து சுதந்திரப்பறவைகள் வெளியீட்டுப்பிரிவினர் இக்கவிதை நூலை வெளியிட்டிருக்கின்றனர். எமது மண்ணும்,மக்களும் உரிமைக்கான எமது போராட்டமும், உயிர்த்தியாகங்களும் இக்கவிதையேட்டில் பதிந்திருக்கின்றன. ஒரு காலத்தின் படைப்பாக நிலைத்திருக்கும் நூலாக பெண் கவிஞர் என்ற வரிசையில் இவரின் இக்கவிதை நூல் பேசப்படும்.**

**சிறந்த அட்டைப்படம் இக்கவிதை நூலுக்கு மெருகேற்றுகிறது. தேசியத்தலைவரின் ஆசியுரை இக்கவிஞரின் கவிதை நூலின் கனதியை நிரூபிக்கிறது.**



# பெண்களும் சட்டமும்

'வசந்தி இந்த முதுக ஒருக்காப் பார்'
'ஏன் கலண்டு போச்சே' வெடுக்கென வந்தது பதில்.
'இஞ்சே எரியுதப்பா ஒருக்காப் பார்.' 'இஞ்ச என்ன விளையாடிக்கொண்டே இருக்கிறன்..... ம்... ' வசந்தி அடுப்பில் வைச்ச சோத்துப்பானையைப் பார்த்தபடி 'உம்' மென்றிருந்தாள். துரையன் தனக்கு எட்டும்வரை கையை நீட்டித் தடவிப்பார்த்தான்.

அப்போதுதான் அங்கு வந்த அயல்வீட்டு தங்கம்மா ஆச்சி, எங்க, என்ன குனி... பாக்க... என்றவள், அவன் குனிய முதுகைப் பார்த்து விட்டு ஏங்கினாள். என்னடா இப்பிடி அதைச்சுப்போய்க் கிடக்கு'

எங்கயாச்சி வெள்ளாமையைச் செய்து போட்டு, அங்க குடலையும் கதிரும் காயுது. வாட்டப்பம்மைக் கொண்டே இறைக்கிறது. பம் தூக்கித் தூக்கி எரியுது. அங்க நெல்லுக்கு இறைச்சுப் போட்டு இஞ்ச கத்தரிக்கு இறைக்க வேணும். அங்கும் இஞ்சுமா தோள்ளதானே சுமக்கிறன்.

'ம் பெரிய நூதனந்தான் மெசின் சுமந்து வீங்கிப் போச்சு. எல்லாம் கொழுப்பு' வசந்தி புறுபுறுத்தாள்.

அவள் அப்படித்தான். அவன் என்ன செய்தாலும் நன்மை சொன்னது கிடையாது. அவனும் அதைப் பெரிது படுத்தமாட்டான். ஆனால் எப்போதாவது அவளுடைய சொல் பொறுக்க முடியாமல் போகும். அவனும் ஏதாவது சொல்லி அடிதடியில் முடியும்.

துரையன் நல்லவனாகத்தான் இருந்தான். இந்த இரக்க குணமே அவனுக்கு பலவழிகளிலும் இடஞ்சலாக இருந்தது. யாராவது அவனைப் புகழ்ந்து ஏற்றி விட்டால் போதும் எந்தக் காரியத்தையும் செய்து விடுவான். இளமையிலேயே உறவு களைப் பிரிந்துவிட்டான் துரையன். வசந்தியும் அப்படித்தான். இதுவே அவர்கள் எவ்வளவுதான் அடிபட்டாலும் சேர்ந்து வாழவும் கைகொடுத்தது.





வசந்தி ஒரு போதும் துரையனுக்கு விட்டுக்கொடுத்தது இல்லை. துரையன் கமன உழைப்பாளி. அவன் சம்பளம் எடுக்கும் நாள் மட்டுமே வசந்தி அவனுடன் சிரித்துப் பேசும் நாள். இரண்டு மூன்று நாள் கடந்தால் பின்பும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வாள்.

இரண்டு பிள்ளைகள் மூத்தவன் ஆறுவயது. இளையவன் இரண்டு வயதாக இருந்த போது துரையனுக்கு தெரியாமலே சவுதிக்குப் போனவள் வசந்தி. துரையன் இரண்டு பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு தொழிலுக்கும் போக முடியாமல் அவதிப்பட்டான். உறவுகள் அனைத்தும் கைவிட்ட நிலையில், மனைவியும் போக, அவனுடைய மனதுக்கு ஆறுதலாக மது கிடைத்தது. எப்போதாவது குடிப்பவன். நிரந்தரமாக குடிக்கத் தொடங்கினான்.வசந்தி வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்தாள். கண்ணுக்கு மை, கை கால் விரல்களுக்கு நகப்பூச்சு உதட்டுக்குச் சாயம், பளபளக்கும் உடையுடன் குதியுயர்ந்த மின்னல் செருப்புடன், கொழும்பிலிருந்து வாடகைக்கமர்த்திய டொல்பின் வாகனத்தில் இரண்டு இளைஞர்களின் துணையுடன்அவள் வந்து சேர்ந்த போது, அவளுடைய பிள்ளைகள் அயலிலுள்ள கோவிலொன்றில் கிழிந்த ஆடைகளுடன் அன்னதானச் சோற்றுக்கு காத்திருந்தனர். துரையன் கசிப்புக் குடித்ததற்காக கைது செய்யப்பட்டிருந்தான்.

படிப்படியாக வீட்டை ஒரு ஒழுங்குக்குள் கொண்டு வந்தவள். மீண்டும் ஒருநாள் காணாமல் போனாள். துரையன் ஒன்றும் செய்யத் தோன்றாதவனாய் பைத்தியம் பிடித்து அலைந்தான். உழைத்த பணத்தைக் குடித்தான். அல்லது குடிக்க வாங்கிக் கொடுத்தே அவன் உழைப்பைச் சுரண்டினர் பலர். மறுபடி வசந்தி வந்த போது மூத்தவன் படிப்பை இடைநிறுத்தியிருந்தான். இளையவனுடன் வீட்டுக்கு வீடு ஏவல் செய்து சாப்பிட்டுக்கொண்டிருந்தனர் பிள்ளைகள். மறுபடி அலங்காரப் பதுமையாக வந்திறங்கிய வசந்தி யாரையும் மதிக்கவில்லை. ஊருக்குள்கூட மற்றவர்களை எடுத்தெறிந்து நடத்தினாள். இஷ்டப்பட்டபடி நடந்தாள். துரையனையும் தன் வம்புகளில் மாட்டிவிட்டாள். அவனுக்கு தான் குடித்தால் உலகமே தெரியாதே 'வசந்தி பசிக்குது சோத்தப் போடு'. என்ன... சோறா... அவள் என்னை என்னமாரிக் கேள்வி கேட்டவள். உனக்குத் தெரியாதே. நீயொரு பொண்ணையன்தானே. ரோசமில்ல சோறா...? திண்டு திண்டு போட்டு கிட அவளைப்போய் நாலு கேக்க தெரியா.. அவளார்? நானார்? முதலவளைக் கேட்டுட்டு வா சோறுதர. வசந்தி வாய் மூடுவது கஷ்டம். துரையனும் நல்ல வெறியில் இருந்தார். உடனேயே புறப்பட்டுப் போய்விடுவான். எந்தக் கோட்டையாக இருந்தாலும் புகுந்து தாக்குவான்.

மறுநாள் பொலிஸ்வரும் வசந்தி கூடவே போய் பிணையெடுத்துவிடுவாள். சில நாளில் வசந்தியே முறையா வாங்கிக் கட்டுவாள். பொலிஸ்சுக்கோ, அல்லது இயக்கத்துக்கோ போய் முறைப்பாடு கொடுப்பாள். அவர்களும் துரையனைக் கைது செய்து கொண்டு போய் அடைப்பார்கள். அடிப்பார்கள்.

இது ஒரு தொடர் கதை. துரையனும் வசந்தியும் ஊரவர்களாலேயே ஒதுக்கப்பட்டு விட்டார்கள். யாரும் அவர்களோடு பகிடிக்குக்கூட வம்பு வைத்துக் கொள்வதில்லை. வசந்திக்கு வாய்மட்டுமல்ல ஊருக்குள் தன்னைப் போல அழகி வேறு யாருமில்லை என்ற மமதை இருந்தது.

யாருக்கும் கட்டுப்படாத ஒரு வாழ்க்கை அவளுடையது. இந்நிலையில் அவள் துரையனை ஒதுக்க ஆரம்பித்தாள். இது சண்டையாக மாறும். அவள் சாமர்த்தியமாக பிழையை அவன் மீது போடுவதுடன் மகனை வைத்தே துரையனை அடிக்க ஆரம்பித்தாள். பெற்ற தகப்பனோடு சமதையாக கட்டிப்புரண்டு அடிபடவும் துரையன் கடும்போதையிலிருந்தால் அடித்துப் போடவும் மகனை ஏவினாள். தாயிடமிருந்த பணம் பிள்ளைகளை அவள் பக்கம் தள்ளியது. எனினும். கணவன் மனைவியை அடிப்பது பெண்ணுரிமை மீறல். துரையனை திருவுபலகையாலேயே அடித்து மண்டையைப் பிளந்தவள் வசந்தி. பின்னர் மருந்தும் கட்டியவள்தான். என்றாலும் ஆண்கள் பெண்களை அடிப்பது வன்முறை. தினமும் சித்திரவதைப்பட்டுக் கொண்டு ஒரு பெண்ணால் எப்படி வாழமுடியும். இப்போது பெண்களுக்கு சட்டப் பாதுகாப்பு உண்டு. அடித்து நொருக்கும் கணவனுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம். இதற்கெல்லாம் பெண்ணிய அமைப்பெல்லாம் இலவச சட்ட உதவிகளைச் செய்கிறது. நீங்கள் உங்கள் கணவனால் துன்புறுத்தப்பட்டால் உடனடியாக எம்மிடம் உதவிக்கு வாருங்கள். என்று ஒரு சேவை மனப்பான்மையுள்ள அமைப்பு அறிக்கை விட்டது.

வசந்தி உடனடியாகவே அங்கு போனாள். ‘அய்யோ இந்தாள் ஒரே அடியுமாக்கினையும்தான். என்ன செய்யிறதோ தெரியாது.’

ஓ.. அப்ப ஆளக் கொஞ்ச நாளைக்கு உள்ளுக்க வைக்கத்தான் வேணும். இனியேதும் பிரச்சனையெண்டால் உடன வாங்கோ..

அதென்னவோ சொல்லி வைச்சமாதிரி துரையன் ஒரு பிரச்சனைக்கும் போகவில்லை. நெல்லு வயலுக்கு நீர்இறைப்பு, கத்தரிக்கு இறைப்பு பகலில் கூலிவேலை வீட்டில் கழிப்பதற்கு நேரமில்லை.

வசந்தியும் தருணம் பார்த்துக் காத்திருந்தாள். எடுத்ததற்கெல்லாம் எரிந்து விழுந்தாள். துரையனுக்கு நின்று பேச நேரமில்லை. அன்று வேலை செய்த இடத்தில் தோழர்களுடன் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தான்.

வசந்தி போய்ப்படுத்துக்கொண்டாள். ‘சாப்பாட்டப் போடப்பா..’ ‘ஏன் போட்டுத்தின்னக் கொள்ளையேகுடிச்சுட்டு வந்து ஆட்டம் போடுறாய்’ ‘என்னடி குடிச்சிட்டோ... குடி... குடிச்சிட்டோ உன்ர காசிலயே குடிச்ச நான்....’





சட்டென கையில் கிடைத்த விறகுதடியை எடுக்க வசந்தி இருட்டில் முற்றத்திற்குத்தாவினாள். அப்படியே பற்றைக்குள் பதுங்கினாள். துரையன் அவளைத் தேடி அலுத்துப் போய் படுக்கையில் விழுந்தான். வெறிமயக்கம் கண்ணைமூடிக்கொண்டான்.அருகில் அவனுடைய மகள் வயது பதினைந்து படுத்துறங்கியிருந்தாள். அவனும் உறங்கிவிட்டான்.

வசந்தி மெதுவாக வந்து மகளை எழுப்பி அடுத்த அறைக்குள் போய்ப் படுக்கச் சொன்னாள். அவள் எழுந்து கொண்ட போது துரையனும் கண்விழித்தான். வசந்தியைத்தான் விரட்டிச் சென்றதை அவன் மறந்துவிட்டான். அதாவது வெறி குறைந்திருந்தது.

‘ஏனடி இப்ப அவளை எழுப்பிறாய்’ என்றான். ‘ம்... நீயொரு மிருகம் உனக்குக்கிட்ட அவளை படுக்கவிடேலா’.

‘அப்ப... என்ர பிள்ளைய நான்... இழுத்துப்போடுவன்அப்பிடித்தானே, இழுத்தாலும் இழுப்பாய் ஆர் கண்டது’...

மறுகணம் அவளைப்பாய்ந்து அடித்தான் துரையன். மகனை நோக்கி கூச்சலிட்டாள் வசந்தி. ‘அவனுக்கு போடடா நல்லா... குடுறா.. குடுறா... மகன் தகப்பனைப் புரட்டிப் புரட்டி அடித்தான்.

மறுநாள் குறித்த சட்ட ஆலோசகரிடம் காலையிலேயே போனாள் வசந்தி.

அந்தச் சட்ட ஆலோசகர் இது அவனை உள்ளுக்குத் தள்ள போதாது. நீ நான் சொல்லுற மாதிரி ஒரு என்றியைப்போடு என்றார். படிப்பறிவே இல்லாத வசந்தி மகளையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையத்துக்குப் போனது துரையனுக்குத் தெரியாது.

அவன் வழமைபோல வயலுக்கு நீர் இறைக்கப் போய்விட்டான். மறுநாள். திடீரென பொலீஸ் றக்வண்டி ஒன்று ஊருக்குள் நுழைந்தது. பல இடங்களைச் சுற்றி வளைத்தது. பலரை விசாரித்தது. வயலில் நின்றபடி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த துரையனை திடீரெனச் சூழ்ந்து பிடித்தனர். ட்றக்கில் ஏற்றிக் கொண்டு சென்றனர்.கூட வேலை செய்துகொண்டிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனைப் பிணையெடுப்பதற்காக அவனுடைய உறவினர்கள் போனபோது பதினான்கு நாட்களுக்கு விடமாட்டோம் என்றனர்.

வழக்கம் போல துரையனைப் பிணையெடுக்க வசந்தியே போனாள். ஆனால் அவளுடைய சட்ட ஆலோசகர் முறைப்பாட்டாளர் பிணையெடுக்க முடியாது என்று கூறிவிட்டார்.

துரையனைப் பொலீஸ் சுற்றி வளைத்துக் கைது செய்தமையானது ஊராரின்கண்டனத்துக்குள்ளானது. எனவே வசந்தி தனது இரகசிய நட்பைத் தவிர வேறு உதவிகளைப் பெற முடியாத நிலை வந்தது. அவனுக்கு இடைஞ்சலாக இருந்த துரையனும் இல்லாமல் போகவே அவன் சுதந்திரமாக அவளையும் வீட்டையும் நிர்வகிக்க ஆரம்பித்தான். இது வசந்திக்குப் பிடிக்கவில்லை. அவள் கட்டுக்குள் நிற்பவள் அல்ல அதோடு போட்ட முறைப்பாட்டின் தாக்கமும் அவளுக்குத் தெரியவில்லை. தாயின் சொல்லைக் கேட்டு தகப்பனை அடித்த மகனுக்கும் இதன் தாக்கம் தெரியவில்லை.

நீங்கள் போட்ட முறைப்பாடு சாட்சிகளுடன் நிரூபிக்கப்பட்டால் ஆயுள்தண்டனையோ அல்லது மரணதண்டனையோ கூட வழங்கப்படலாம். என்று ஒரு சட்டத்தரணி கூறிய போது வசந்தி அதிர்ந்து போனாள்.

மகளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றதாகவே முறைப்பாடு கொடுக்கப்பட்டிருந்தது. துரையன் இப்போது விளக்கமறியல் கைதி பிணைவழங்க முடியாத கைதி. சட்டக்கல்லூரியிலிருந்து வெளியேறி சந்தர்ப்பமின்றி காத்திருக்கும் இந்தச் சட்டத்தரணிகள் மனித உறவுகளிடையே பேதமேற்படுத்தி பணத்தையே குறியாகக் கொண்டு நடப்பதை மக்கள் உணர வேண்டும். ஏதாவது நிறுவனங்களின் பெயரில் இலவச சட்ட உதவி என்று விளம்பரம் செய்வார்கள். உண்மையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியில் இயங்கும் இந்நிறுவனங்கள் இவர்களுக்கான கட்டணத்தை வழங்குகின்றன என்பது மெய்.

சட்டம் பெண்களுக்கு வழங்கியுள்ள சலுகைகள் எதுவுமில்லை. என்று சலித்துக் கொள்பவர்களுக்கு இந்த உண்மைச் சம்பவம் ஒரு வழிகாட்டிதான். ஆண்கள் மட்டும்தான் கொடுமை செய்கிறார்கள் என்பதில்லை. பெண்களும்தான்.

அண்மையில் கிளிநொச்சியில் கூலித்தகராறு ஏற்பட்டபோது ஒரு பெண் தன் தொழில் தருநரைப் பார்த்து ' காசை ஒழுங்கா கொடுக்கல்லென்ன கையப்பிடிச்சு இழுத்தான்னு கேஸ்போட்டிடுவேன்'. என்றாளாம். உடனே காசைத்தந்து விட்டானாம் முதலாளி. இதை அவள் என்னிடமே சொன்னாள்.

பெண்களுக்கு சட்டம் வழங்கும் சலுகைகளை தேவைப்படுபவர்கள் பயன்படத்துவது இல்லை. ஆனால் சமூகவிரோதிகள் அதை நன்கு பயன்படுத்துகின்றனர்.

✦

தமயந்தி







# கிரண்பேடி

**போ**க்குவரத்துக் காவல்துறை துணை கமிஷனர் திருமதி கிரண்பேடி. தசறாக நிறுத்தப்படும் வாகனங்களுக்கு எதிராக எடுத்திருக்கும் நடவடிக்கையில் ஒரு அதிர்ச்சியூட்டும் திருப்புமுனை ஏற்பட்டுள்ளது.

யாரும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அளவில் பிரதமரின் காருக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது! நடக்க முடியாதது நடந்து விட்டது! ஆகஸ்ட் ஐந்தாம் திகதி பிரதமரும் அவரது குடும்பத்தினரும் யு. எஸ். ஏ சென்று விட்ட நிலையில், அவரது வெள்ளை அம்பாசிடர் கார் (DHI-1817) கன்னாட் பிளேசுக்கு அருகில், யூசுப்ஸாய் மார்க்கட்டுக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்தது.

அதைக் கண்ட போக்குவரத்து போலீஸ் அதிகாரி. அது தவறான இடத்தில் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டு, அதற்கு 'செலான்' கொடுத்தமார். அப்போதுதான் அது பிரதமரின் கார் என்று அவருக்குத் தெரிந்தது. அந்தக் காருக்குப் பின்னால் வந்த அதிகாரிகள், அதைச் சுட்டிக்காட்டியும், காவல் அதிகாரி மசியவில்லை. சாதாரண மனிதராக இருந்தாலும் சரி, முக்கிய பிரமுகராக இருந்தாலும் சரி, கார் நிறுத்தப்பட்டது தவறு என்று அவர் சொல்லி விட்டாராம்!

இது சம்பந்தமாக விசாரணை ஒன்றுக்கு உத்தரவிடப்பட்டது.

பிரதமர் நாடு திரும்பியதும் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. போக்குவரத்துக் காவல்துறைக்கும், பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையில் ஏன் இணக்கமில்லாமல் போய் விட்டது? என்பது விசாரணைக்குரியதாக உள்ளது. கிரண்பேடி தன் கடமையைத்தான் செய்திருக்கிறார். விடயத்தைப் பகிரங்கமாக்கியிருக்கத் தேவையில்லை என்றாலும் கிரண்பேடியை குற்றஞ் சாட்ட வழியில்லை. அந்தக் காரை நிறுத்தியிருந்த இடம் ஹாண்டா அண் கம்பனி. அது பிரதமருக்கு உதவியாளராக இருப்பவரின் நண்பருக்குச் சொந்தமானது. காரின் இருக்கைகள், உதிரிப் பாகங்கள் விற்கும் நிறுவனம் அது. அதன் வாடிக்கையாளர்கள் பெரிய மனிதர்கள், அதன் அருகே உணவு விடுதி, சிற்றுண்டிச்சாலை முதலியவை இருப்பதால் நெரிசல் அதிகம்.

அந்த ஹாண்ட, மற்றும் பாப்பர் சன்ஸ் என்ற கார் உதிரிப் பாகங்கள், தங்கள் கடைகளுக்கு முன்னால் கார்களை நிறுத்திப் பழுது பார்ப்பதை முன்பே போக்குவரத்துத் துறையினர் ஆட்சேபித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் கடைக்காரர்களுக்கும் வேறு இடம் இல்லை.

பிரதமரின் காருக்கு அபராதம் விதிக்கப்பட்ட சம்பவம் இப்போது சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. கிரண்பேடியின் போக்குவரத்துத் திட்டம், 'சப்தர்ஜங்' சாலை,1 ஆம் எண் வீட்டு வாசலை அடைந்திருக்கிறது என்பது ஒரு முக்கியமான விஷயம்!

ஆசிய விளையாட்டுக்கு முன்பு கிரண்பேடியின் திட்டத்திற்கு பலர் உதவ முன் வந்து பெரும் விளம்பரம் தேடிக் கொண்டார்கள் என்பது உண்மைதான்.

கூடுமானவரை சம பங்கீடாக, முன் வந்தவர்களுக்கு வழங்கப்பட்டாலும், பண பலமும், அரசியல் செல்வாக்கு படைத்த நிறுவனங்கள் தங்கள் அதிகார பலத்திற்கு ஏற்ற முறையில் அதிக வாய்ப்புக் கிடைக்க வில்லை என்று குமுறிக்கொண்டிருந்தன. அதன் 'அடையாளங்கள்' கொஞ்சம் கொஞ்சமாய்க் கிரணுக்கு தெரிய வந்தன. கழுதைக்கு முன்னால் கேரட் தொங்க விடுற மாதிரி, சிலர் ஆசை வார்த்தை



காட்ட ஆரம்பித்தார்கள். போக்குவரத்துத் திட்டங்களைக் கற்றுக் கொள்ள கிரணுக்கு, ஆஸ்திரேலியா, யப்பான் போன்ற நாடுகளில் ஸ்காலர்ஷிப் சலுகைகள் வழங்கி, அழைத்திருந்தார்கள். ஆனால், ஆசிய விளையாட்டு சமயத்தில் அவர் டில்லியை விட்டு வெளியே செல்ல விரும்பவில்லை. பல மாதங்களாகத் திட்டமிடப்பட்ட 'பாடுகள்' வீணாகிப் போய்விடுமே என்று அவர் நினைத்தார். பொறுப்பைக் கைகழுவிவிட்டு சொந்த லாபம் கருதி வெளிநாடு சென்றுவிட அவர் மனம் ஒப்பவில்லை.

விளையாட்டு விழாவுக்கான திட்ட ஆலோசனைக் கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கும் வேளைகளில், அமைச்சரக அதிகாரிகளின் தொலை பேசி வரும். அவர்கள், அவரது வெளிநாட்டுப் பயணத்திற்கு வாழ்த்துக் கூறுவார்கள்! ஆனால், அதற்கு, கிரண் மசியவில்லை. அந்தச் சலுகைகளை மறுத்துவிட்டார்.

" உங்களை எப்படியாவது பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கு மேலிடத்தில் செய்யப்பட்ட தந்திரமா அது? அதனால், சிலரது பாராட்டைப் பெறும் முயற்சியா அது?" என்று கேட்ட போது கிரண் சொன்ன பதில் இது.

" ஆசிய விளையாட்டின் போது, போக்குவரத்து, பெரும் குழப்பம் அடைந்திருந்தால் என்ன செய்திருப்பேன்? ஜப்பானிலிருந்தோ, ஆஸ்திரேலியாவிலிருந்தோ அப்போதுதான் திரும்பி வந்திருப்பதால் சரியாகத் திட்டமிட முடியவில்லை என்று மன்னிப்புக் கேட்பேனோ? அந்த மாதிரியான நெருக்கடி நேரங்களில் வெளிநாட்டுப் பயணம் தேவையே இல்லை. என்னுடைய நோக்கம் ஒன்று மட்டுமே, போக்குவரத்து, எந்தச் சிரமமும் இல்லாமல் இயல்பாக அமைந்துவிட வேண்டும். கட்டுப்பாடாக அது நடந்து விட வேண்டும். யாரும் குற்றம் குறை சொல்லாதபடி அது இருக்க வேண்டும். போக்குவரத்து திட்டமிடாமல் இந்தக் குறை. குழப்பம் நேர்ந்தது என்று யாரும் சொல்லிவிடக்கூடாது. அருமையான ஏற்பாடு செய்து விட வேண்டும். இதுதான் என்மனதில் இருந்தது. வேறு சிந்தனைக்கே இடம் இருக்கவில்லை."

தன்னைப் பழிவாங்க நினைப்பவர்கள் மீது சிறிது கோபம் ஏற்பட்டால் கூட, அந்த உணர்வு தற்காலிகமானதாகவே இருந்தது.

ஆசிய விளையாட்டு நிகழ்ச்சியோடுதான் வண்ணத் தொலைக்காட்சி இந்தியாவிற்குள் காலடி எடுத்து வைத்தது. குடியரசுநாள் அணிவகுப்பு, சுதந்திரதினவிழா, ஆகியவற்றுக்கு முன்பு, போக்குவரத்துத் துணைக் கமிஷனர் அறிவிப்பு செய்ய வேண்டியிருக்கும்,. அதே முறையில், ஆசிய விளையாட்டுச் சமயத்தில் போக்குவரத்துச் சம்பந்தமா பொது மக்களுக்கு அறிவிப்புச் செய்ய வேண்டிய பொறுப்பு கிரணுடையது.

ஆனால், கிரண் தொலைக்காட்சியில் தான் பேசுவதற்குப் பதிலாகத் தனக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரியை அனுப்ப முன்வந்தார். தலை நகரில் உள்ள பத்தொன்பது விளையாட்டு அரங்குகளில் போட்டிகள் நடக்கப் போகின்றது. ஒவ்வொரு அரங்கப் பகுதியும் ஒரு தனிப் பிரதேசமாக வரையறை செய்யப்பட்டு. ஒவ்வொன்றிற்கும் தனித்தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறேன். ஒவ்வொரு அரங்கப் பகுதி பற்றியும் அந்த அந்த அதிகாரிதான் தெளிவாகச் சொல்லமுடியும். நீங்கள் விரும்பினால், அவர்களைப் பேச அனுப்பி வைக்கிறேன். என்று சொன்னார் கிரண்!

அவர்கள் திகைத்துப் போனார்கள்! துரதிர்ஷ்ட வசமாக போக்குவரத்துத் துணைக் கமிஷனராக நான் ஒருத்தி மட்டும் தான் இருக்கிறேன். இணைக்கமிஷனராக கூட எனக்கு உதவ யாருமில்லை. என்ன செய்ய? என்று கேட்டார் கிரண். அவர்கள் ஒப்புக்கொள்ள வில்லை. முன் கூட்டி ஒலிப்பதிவு செய்யமுடியாது என்றும்; நேரடி ஒளிப்பில் கிரண்தான் பேச வேண்டுமென்றும், ஒரு தவறு கூட செய்யாமல் பேச வேண்டுமென்றும் சொல்லிவிட்டார்கள்.

அவரது மேலதிகாரிகள், ஏற்கனவே, கிரண் விளம்பர மோகம் பிடித்து அலைகிறார் என்று ஓயாமல் குற்றம்சாட்டிக்கொண்டிருந்த வேளையில் அப்படியொரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

உலகமெல்லாம் பார்க்கும்படியாக, இந்தியாவில், வண்ணத்





தொலைக்காட்சியில் முதன் முதலாகப் பேசும் வாய்ப்பு, ஒரு நிர்ப்பந்தமாக அவர் மீது திணிக்கப்பட்டது! அவர் என்னதான் செய்வார்!

வேறு வழியில்லாமல் அவரே பேசினார்... பல முறை... மீண்டும் மீண்டும்... வண்ணத் தொலைக்காட்சியில்... இந்தியாவிலும், வெளிநாட்டிலும் பார்க்கும்படியாக.. ஆனால், அது அவர் பணிபற்றியதாக இருந்தது. அவரது திட்டமிடல் பற்றியதாக இருந்தது. அது அவரது தலைவிதியாகவும் இருந்தது!

டில்லியிலிருந்து கோவாக்கு தரப்பட்ட தமாறுதல் சகிகக முடியாத வேதனை தரும் அனுபவமாக கிரணுக்கு அமைந்தது.

டில்லி போக்குவரத்துக் காவல்துறையில் முழு மூச்சோடு அவர் பட்டபாடுகளும், அவரது 'ஜூனும்' (பிடிவாதமும்) நூற்றுக்கு நூறு அவருக்கு வெற்றியைத் தேடித்தந்தது.

ஆசிய விளையாட்டுக்களின் போது அக்கினிக் குண்டத்தில் இறங்கி நடப்பது போலத்தான் அவர் உணர்ந்தார். அப்ப அவர் மிகப் பெரிய பொறுப்பை ஏற்று, கடினமாக உழைத்துக்கொண்டிருந்த வேளையிலேயே, விழா முடியும் வரைக்கும் தான் அவரை மேலிடம் சகித்துக் கொள்ளப் போகிறது என்ற செய்தியின் சில 'அறிகுறிகள்' தோன்ற ஆரம்பித்தன! அப்படியே நடந்துவிட்டது. விழா முடிந்ததும் கிரண் கோவாவுக்கு மாற்றப்பட்டார். இடமாற்றம் என்பது தொழிலின் ஒரு பகுதி. இன்றில்லாவிட்டால் அது நாளை வரத்தான் செய்யும் என்று அவர் இப்போது குறிப்பிடுகிறார். ஆனால் எனக்கு மேலும் ஒன்பது மாதங்கள் அங்கே பணியாற்றக் காலம் இருந்தது. எனக்கு கவலை தந்த விஷயம். என் மகளின் உடல்நிலைதான். அவள் கிட்னி அழற்சியால் துன்பப்பட்டுக் கொண்டிருந்தாள். சிகிச்சை பெற்று வந்த அந்த நேரத்தில் நான் அவள் அருகில் இருப்பது மிகவும் அவசியமாக இருந்தது என்று அதை வேதனையுடன் நினைவு கூறுகிறார் கிரண்.

அந்தச் சமயத்தில் கிரணின் கணவர் பிரஜ்பேடியும் அமிர்தரசரசில்

தொழில் செய்துகொண்டிருந்தார். தாத்தா, பாட்டியும் அம்மாவும் தான் அந்தக் குழந்தைக்குப் பாதுகாப்பு.

இந்த இக்கட்டான சூழ்நிலையை விளக்கி, அமைச்சரகத்திற்கு கடிதம் எழுதியிருந்தார் கிரண். தன்னுடைய புதல்வியின் உடல் நிலை ஓரளவு சரியாகும் வரையாவது மாறுதலை ஒத்தி வைக்கவேண்டியிருந்தார். யாரும் அதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை! மேலிடத்தில் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை! நேரில் அழைத்து விசாரிக்கவும் இல்லை.

அதையெல்லாம் இப்போது நினைத்துப் பார்க்கிறேன். மேலதிகாரிகள் நேரில் சந்தித்து நிலமையை விளக்கிச் சொல்ல நான் நீண்ட காலம் காத்திருந்தேன். சூழ் நிலையை விளக்கிச் சொன்னால் எனக்கு உதவி கிடைக்கும் என்று நம்பினேன். என் மகளை விட்டுப் பிரிந்து செல்வதால் எங்கள் இருவருக்கும் ஏற்படப்போகும் மன வேதனையை அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்பினேன். ஆனால் நான், நான், அரசாங்கத்தில் கிடைக்காத ஒன்றைத் தவறாக எதிர்பார்த்துக்கொண்டிருந்துவிட்டேன். அந்த ஒன்றுதான் உணர்ச்சி.!

**தொடரும்..**

> **நம் சிந்தனையிலும், புத்தகத்திலும் பெண் என்பவள் தெய்வம். ஆனால் நடைமுறையில் அவளோர் அடிமை வீட்டில் வளர்க்கப்படும் மிருகம்.**
>
> **காண் டேகர்**



# நாற்றின் அடுத்த இதழ்

**இருபத்தைந்தாவது வெள்ளிவிழாச் சிறப்பிதழாக வெளிவருகிறது. அதிக பக்கங்களுடன் பல அம்சங்களையும் தாங்கி வெளிவரும் இவ் இதழுக்கு!**

**நாற்று வாசகர்களிடமிருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.**

- **சிறுகதைகள்**
- **கவிதைகள்**
- **ஆய்வுக் கட்டுரைகள்**

**இவற்றுள் எதுவென்றாலும் எழுதி அனுப்பலாம்.**

**அனுப்பவேண்டிய முகவரி:**
*தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்*
*04 ஆம் வட்டாரம்*
*கோம்பாவில்*
*புதுக்குடியிருப்பு.*

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் வெளியீடாக நாற்று பெண்கள் சமூக இதழ் இம்முறையும் பல்வேறுபட்ட ஆக்கங்களைத் தாங்கியதாக உங்கள் கைகளில் வந்திருக்கிறது.

தொடர்ந்து வரும் நாற்று வாசகர்களிடமிருந்தும், எழுத்தாளரிடமிருந்தும், மேன்மேலும் தனது முன்னேற்றத்தை எதிர்பார்த்து நிற்கிறது.

இனிவரும் நாற்றுக்காய் வாசகர்களே, எழுத்தாளர்களே தங்களின் தரமான ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

நாற்றுக்கான எங்கள் முகவரி:



தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்,
2ம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

"நாற்று" பெற்றுக் கொள்ள வேண்டிய இடங்கள்:

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்,
2ம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.



அறிவமுது பொத்தகசாலை,
சகல கிளைகளிலும்.